
கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# பகவத் தரிசனம்



ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை ஆகஸ்ட் 2011 ₹ 15/-





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# பகவத் தரிசனம்


மலர் 1, இதழ் 2 செப்டம்பர் 2011




3 உள்ளிருக்கும் கடவுளைக் காணுதல்

—ஸ்ரீல பிரபுபாதர்

கடவுளைக் காண்பதற்கான நடைமுறை வழி



7 வாமன அவதாரம்


—ஸ்ரீ நாராயண தாஸ்

அசுரர்களிடமிருந்து தேவலோகத்தை மீட்பதற்காக ஒரு பிராமண சிறுவனின் வடிவில் பகவான் தோன்றினார். வாமனர் என்று அறியப்படும் அவரது அவதாரத்தின் சில முக்கிய சிறப்புகள்.

ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி 12

—நித்யானந்த தாஸ்


விருந்தாவனத்தின் ஆறு கோஸ்வாமிகள் பகவான் சைதன்யரின் முதன்மையான சீடர்கள். அவர்களில் ஒருவரான ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியின் வரலாறு.




எல்லோருக்கும் வேலை கிடைக்க வேண்டும் 17

—ஸ்ரீல பிரபுபாதர்

ஸ்ரீல பிரபுபாதருடன் ஜெனீவாவில் நடைபெற்ற ஓர் உரையாடல்





20 நான் யார்?

—ஜெய கோபிநாத தாஸ்

சிலர் இக்கேள்வியினை மிகப்பெரிய புதிராகவும், சிலர் இதனை அசட்டுத்தனமான கேள்வியாகவும் நினைப்பர்.



23 பகவத் கீதை உண்மையுருவில்

—ஸ்ரீ கிரிதாரி தாஸ்

ஒன்பதாம் அத்தியாயத்தின் ஒரு கண்ணோட்டம்

6 பகவத் கீதை உங்களுடைய செல்போனாக மாறினால்

10 கொல்லனும் குயவனும்

19 கிருஷ்ணர்...

28 ஸ்ரீமத் பாகவதத்தின் முழுப் பதிப்பு, தற்போது தெலுங்கிலும்

29 ஸ்ரீமத் பாகவதம்

# பகவத் தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *பகவத் தரிசனம்*.

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ் (C.செந்தில் குமார்)

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், இராம கிங்கர தாஸ், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், சுகோபி தேவி தாஸி, மதுமதி பிரியா தேவி தாஸி, ராஜ சேகர், ஜெய கிருஷ்ண தாஸ்

**பதிப்பாசிரியர்:** யுதிஷ்டிர தாஸ் (உஜ்வல் ஜாஜோ)

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** ஸ்ரீ கேசவ தாஸ்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**பதிப்பகத்தார் அலுவலகம்:** பேக் டு காட்ஹெட், 33, ஜானகி குடிர், ஜுஹு சர்ச் எதிரில், ஜுஹு, மும்பை - 400049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** சாரதி பிரிண்டர்ஸ், 6/63, LIG, தொண்டைமான் தெரு, NH-1, மறைமலைநகர், தமிழ்நாடு - 603209.



**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே. (பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் அறங்காவலர்: ஜெயாத்வைத ஸ்வாமி)



பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை


# உங்களின் வரிகள்

தீவிரவாதச் செயல்கள்--ஓர் ஆன்மீகப் பார்வை என்னும் கட்டுரை (ஆகஸ்ட் 2011) மாறுபட்ட கண்ணோட்டத்தில் சிந்தித்து எழுதப்பட்டிருந்தது. மனிதர்களைக் கொல்வது மட்டும் தீவிரவாதம் அல்ல, கோடிக்கணக்கான மிருகங்களும், பறவைகளும் கசாப்புக்கடைகளில் கொல்லப்படுவதும் தீவிரவாதச் செயல்தான் என்ற கனமான உண்மையை தவத்திரு.பக்தி விகாஸ ஸ்வாமி அவர்கள் கோடிட்டுக் காட்டிய விதம் சிந்திக்கத்தக்கது.

—த.சத்தியநாராயணன், அயன்புரம்

ஜுலை இதழில் மசோதாக்களால் ஊழலை ஒழிக்க முடியுமா? என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரை மிகவும் அற்புதமாக இருந்தது. சிறுகுழந்தைகளுக்கு இவற்றைக் கற்றுக் கொடுத்தால், அவர்கள் வருங்காலத்தில் லஞ்சம் கொடுப்பதையும் லஞ்சம் வாங்குவதையும் தடுக்க முடியும். மேலும், மின் பற்றாக்குறை, தீர்வு உண்டா? என்ற தலைப்பில் வந்த கட்டுரை ஆழமான கருத்துக்களையும் சிந்திக்கக்கூடிய விஷயங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது.

—முத்துராமன், சிவகங்கை

# சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

சந்தா முடிவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து தங்களது ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# கேள்விகளும் கருத்துகளும்

**பகவத் தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

# உள்ளிருக்கும் கடவுளைக் காணுதல்

*அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் அக்டோபர் 23, 1972 அன்று விருந்தாவனத்தில் ஆற்றிய உரை*

தச் ச்ரத்ததானா முனயோ
க்ஞான-வைராக்ய-யுக்தயா
பஷ்யந்த்யாத்மனி சாத்மானம்
பக்த்யா ஷ்ருத-க்ரிஹீதயா

“தீவிர ஆர்வம் கொண்டுள்ள மாணவர் அல்லது முனிவர், ஞானத்திலும் துறவிலும் நன்கு நிலைபெற்று, வேதாந்த சுருதியிலிருந்து தாம் கேள்விப்பட்டதற்கு ஏற்ப பக்தித் தொண்டாற்றுவதன் மூலம் பரம்பொருளை அறிகிறார்.” (ஸ்ரீமத் பாகவதம் 1.2.12)

## நம்பிக்கை—முதல் படி

ஸமாதி நிலையை அடைவதற்கான முதல்படி, ஷ்ரத்தா அல்லது நம்பிக்கை என்று இங்கு ஸ்ரீமத் பாகவதம் கூறுகின்றது. சைதன்ய சரிதாம்ருதம் (மத்ய லீலை 22.62), ஷ்ரத்தா என்பதை பின்வருமாறு வரையறுக்கின்றது:

ஷ்ரத்தா-ஷப்தே----விஷ்வாஸ கஹே
ஸுத்ருட நிஷ்சய
க்ருஷ்ணே பக்தி கைலே ஸர்வ-கர்ம
க்ருத ஹய

கிருஷ்ண பக்தனாக மாறுவதால், எல்லா பக்குவத்தையும் அடைய முடியும் என்பதை நீங்கள் உறுதியாக நம்பினால், அதுவே ஷ்ரத்தா, உண்மையான நம்பிக்கை எனப்படும். பகவத் கீதையின் இறுதியில் (18.66) கிருஷ்ணர் கூறுகிறார்:

ஸர்வ-தர்மான் பரித்யஜ்ய
மாம் ஏகம் ஷரணம் வ்ரஜ
அஹம் த்வாம் ஸர்வ-பாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மா ஷுச:

“நீயாக முன்வந்து என்னிடம் சரணடைவாயாக, நான் உனக்குப் பொறுப்பேற்றுக் கொள்வேன். நான் உன்னை எல்லா பாவ விளைவுகளிலிருந்தும் பாதுகாக்கின்றேன், கவலைப்படாதே.” ஒருவர் இந்த அறிவுரைகளை ஏற்றுக் கொண்டு, எந்தவிதமான யோசனையும் இன்றி, உடனடியாக கிருஷ்ணரிடம் சரணடைந்தால், அதுவே ஷ்ரத்தா எனப்படுகிறது. நீங்கள் அத்தகு நம்பிக்கையைப் பெற்று கிருஷ்ணரிடம் சரணடையும்போது, ஞானமும் துறவும் ஒருங்கே அமையப் பெற்ற முனிவராக, அல்லது மஹாத்மாவாக மாறுவீர்கள், தச் ச்ரத்ததானா முனயோ க்ஞான-வைராக்ய-யுக்தயா.

## ஞானத்தினாலும் துறவினாலும் இறைவனைக் காணுதல்

மனித வாழ்க்கையின் குறிக்கோள், ஞானத்தையும் துறவையும் அடைவதே. ஞானம் மட்டும் இருந்தால் அது பயனற்றது, துறவும் இருக்க வேண்டியது மிக அவசியம். அதனால், மாயாவாத பள்ளியை ஸ்தாபித்த ஸ்ரீபாத சங்கராசாரியர், “முதலில் சந்நியாசியாக மாறுங்கள், பிறகு பேசலாம்,” என்று தன்னைப் பின்பற்றியவர்களிடம் கூறினார். எனவே, உண்மையான க்ஞானி அல்லது புத்திசாலி என்பவர்,



பௌதிக விஷயங்களின் மீதான எல்லா பற்றுதல்களையும் துறந்தவராகவும் (வைராகியாகவும்) இருக்க வேண்டும். நம்பிக்கை, சரணாகதி, ஞானம், துறவு ஆகியவற்றின் முடிவு, *பஷ்யந்த்யாத்மனி சாத்மானம்*, ஒருவன் பரமாத்மாவை தனது மனதிலும் தனக்குள்ளும் காண்பதே. இது பாகவதத்தின் மற்றொரு இடத்திலும் (12.13.1) உறுதி செய்யப்பட்டுள்ளது: *த்யானாவஸ்தித-தத்-கதேன மனஸா பஷ்யந்தி யம் யோகின:*, "பக்குவமான யோகி, பரம புருஷ பகவானை எப்போதும் தன்னுள் காண்கின்றான்."

## பிரேமையினால் கிருஷ்ணரைக் காணுதல்

ஒரு பக்குவமான யோகி, பிரேமை என்றழைக்கப்படும் தூய்மையான இறையன்பு கொண்டவனாக உள்ளான். *ப்ரேமாஞ்ஜன-ச்சுரித-பக்தி-விலோசனேன ஸந்த: ஸதைவ ஹ்ருதயேஷு விலோகயந்தி*, "பிரேமை என்னும் மையை கண்களில் இட்டுக் கொண்ட பக்தர்கள், கிருஷ்ணரின் அழகான கருமை நிற உருவத்தைத் தங்களது இதயங்களில் எப்பொழுதும் காண்கிறார்கள்," என்று பிரம்ம சம்ஹிதை (5.38) கூறுகிறது. கிருஷ்ணர் எவ்வளவு அழகானவர் என்பதை நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. அவரது உடல் கோடிக்கணக்கான மன்மதர்களைக் காட்டிலும் அழகு வாய்ந்தது என்று கூறப்படுகிறது (*கந்தர்ப-கோடி-கமனீய-விஷேஷ-ஷோபம்*). மன்மதன் மிகவும் அழகானவன், ஆனால் கோடிக்கணக்கான மன்மதர்களை ஒன்றாக வைத்தாலும், அவர்களுடைய அழகு கிருஷ்ணரின் அழகை மிஞ்ச முடியாது. கண்களை பிரேமை என்னும் மையினால் தடவினால் அன்றி, இந்த விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியாது.

## கிருஷ்ணரை அறிய உதவும் புலன்கள்

நாம் நம்முடைய தற்போதைய மழுங்கிய பௌதிகப் புலன்களைக் கொண்டு கடவுளைப் புரிந்துகொள்ள இயலாது; அப்புலன்கள் பௌதிகப் புலனின்பத்தில் மட்டுமே நாட்டம் கொண்டுள்ளன. இவற்றைக் கொண்டு முற்றிலும் ஆன்மீகமயமான கிருஷ்ணரை எவ்வாறு உணர முடியும்? அஃது இயலாது. எனவே, பக்தி மார்க்கத்தின் மூலமாக நாம் நமது புலன்களைத் தூய்மைப்படுத்த வேண்டும்.

அத: ஸ்ரீ-க்ருஷ்ண நாமாதி
ந பவேத் க்ராஹ்யம் இந்த்ரியை:
ஸேவோன்முகே ஹி ஜிஹ்வாதௌ
ஸ்வயம் ஏவ ஸ்புரத்-யத:

"ஜடத்தினால் களங்கமுற்ற புலன்களைக் கொண்டு, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீகமான நாமம், ரூபம், குணங்கள், மற்றும் லீலைகளை யாராலும் புரிந்துகொள்ள இயலாது. இறைவனின் தெய்வீகத் தொண்டினால் ஒருவன் ஆன்மீகத்தில் தன்னிறைவு அடையும்போது மட்டுமே, அவருடைய தெய்வீகமான நாமம், ரூபம், குணங்கள், லீலைகள் ஆகியவை வெளிப்படுத்தப் படும். (பக்தி ரஸாம்ருத ஸிந்து 1.2.234)

## உடல் சார்ந்த அடையாளத்திலிருந்து விடுபடுதல்

பகவானின் சேவையில் ஈடுபடுவது ஞானம் மற்றும் துறவின் தளத்திற்கு வருவதற்கு உதவுகின்றது. *அஹம் ப்ரஹ்மாஸ்மி*, "நான் இந்த ஜடவுடல் அல்ல, நான் ஆன்மீக ஆத்மா," என்பதைப் புரிந்துகொள்பவர் ஞானத்தின்



பிரேமை என்னும் மையை கண்களில் இட்ட பக்தர்கள், கிருஷ்ணரின் அழகிய கருமை நிற திருமேனியைத் தங்களது இதயத்தில் எப்போதும் காண்கிறார்கள்.

சரியான தளத்தில் இருக்கின்றார். நாம் தற்போது நம்மை உடல் சார்ந்த உறவுகளின் அடிப்படையில் அடையாளப்படுத்திக் கொள்கிறோம். ‘‘நான் ஓர் அமெரிக்கன்,’’ ‘‘நான் ஓர் இந்தியன்,’’ ‘‘நான் ஒரு பிராமணன்,’’ ‘‘நான் ஒரு கருப்பன்,’’ ‘‘நான் ஒரு வெள்ளையன்,’’ ‘‘நான் பலசாலி,’’ ‘‘நான் பலமற்றவன்,’’ ‘‘நான் குண்டன்,’’ ‘‘நான் ஒல்லியானவன்.’’ இவையனைத்துமே உடல் சார்ந்த அடையாளங்கள். இந்த அடையாளங்களிலிருந்து விடுபட்டு, ‘‘நான் கிருஷ்ணரின் நித்திய சேவகன்’’ என்று நினைக்கும்போது, ஒருவன் உண்மையான ஞானத்துடன் உள்ளான்.

## சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்ட பக்தி

ஒருவன் கிருஷ்ணருக்கான பக்தித் தொண்டில் ஈடுபடும்போது, ஞானமும் துறவும் தானாக வரும் என்பதை முன்னரே கண்டோம். ஆனால், அந்த பக்தித் தொண்டு வேத இலக்கியங்களின் கட்டளைக்கு ஏற்ப செய்யப்பட வேண்டும் என்று இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. இதனை ஸ்ரீல ரூப கோஸ்வாமி தனது பக்தி ரஸாம்ருத ஸிந்துவில் (1.2.101) உறுதி செய்கிறார்.

*ஷ்ருதி-ஸ்ம்ருதி-புராணாதி-*
*பஞ்சராத்ர-விதிம் வினா*
*ஐகாந்திகி ஹரேர் பக்திர்*
*உத்பாதாயைவ கல்பதே*

‘‘உபநிஷத்துகள், புராணங்கள், நாரத பஞ்சராத்ரம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட வேத இலக்கியங்களைப் புறக்கணித்து விட்டுச் செய்யப்படும் பக்தித் தொண்டு என்பது, சமுதாயத்தில் வெறும் தொல்லையே.’’

## சீடப் பரம்பரையில் பெறப்படும் பக்தி

இப்புத்தகங்கள் சீடப் பரம்பரையின் வழியாகப் பெறப்பட வேண்டும். வேறு விதமாகக் கூறினால், பக்தி என்ற விஞ்ஞானத்தை அறிந்து கொள்ள, கிருஷ்ணரிடமிருந்து வரும் சீடப் பரம்பரையைச் சார்ந்த ஒரு குருவை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

*நீங்கள் அர்ஜுனனைப் போன்று பகவத் கீதையையும் கிருஷ்ணரையும் புரிந்து கொண்டால், உங்களுடைய அறிவு பக்குவமானதாக அமையும். ஆனால் பகவத் கீதைக்குச் சில கற்பனையான அர்த்தங்களை நீங்கள் கண்டுபிடித்தால், உங்கள் நேரத்தை வீணடித்துக் கொண்டுள்ளீர்கள் என்றே அர்த்தம்.*

உதாரணமாக, பகவத் கீதையை அர்ஜுனனைப் போல ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதாவது, கிருஷ்ணர் அல்லது அவரது பிரதிநிதியிடமிருந்து, பணிவு மற்றும் சேவை மனப்பான்மையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அர்ஜுனனும் சீடப் பரம்பரையில் ஒரு பகுதியாக உள்ளான். சீடத் தொடர் விடுபட்டுப் போனதாலும் பகவத் கீதையின் ஞானம் இழந்து போனதாலும், பகவத் கீதையை கிருஷ்ணர் மீண்டும் அர்ஜுனனுக்கு உபதேசித்தார். எனவே, நீங்கள் அர்ஜுனனைப் போன்று பகவத் கீதையையும் கிருஷ்ணரையும் புரிந்து கொண்டால், உங்களுடைய அறிவு பக்குவமானதாக அமையும். ஆனால் பகவத் கீதைக்குச் சில கற்பனையான அர்த்தங்களை நீங்கள் கண்டுபிடித்தால், உங்கள் நேரத்தை வீணடித்துக் கொண்டுள்ளீர்கள் என்றே அர்த்தம்.

## சொந்த வழிகள் அவசியமில்லை

நேரத்தை வீணடிக்காதீர்கள். கிருஷ்ணர் தன்னை எவ்வாறு பகவத் கீதையில் எடுத்துரைக்கின்றாரோ, அவரை அவ்வாறே உண்மையாகப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். ‘‘நான் இவ்வாறு இருக்கிறேன்,’’ என்று கடவுள் கூறும்போது, அவரை வேறு வகையில் புரிந்துகொள்வதற்கான முயற்சியில் நீங்கள் ஏன் உங்கள் நேரத்தை வீணடிக்க வேண்டும்? ‘‘நானே கடவுள், இதுவே எனது பெயர், இதுவே எனது முகவரி, இவையே எனது செயல்கள்’’ என்று கிருஷ்ணர் எடுத்துரைக்கின்றார். அனைத்தும் இதில் கொடுக்கப்பட்டுவிட்டது. நீங்கள் ஏன் கடவுளைக் கடவுளிடமிருந்து புரிந்துகொள்ளக் கூடாது? அவரைப் புரிந்து கொள்வதற்கு உங்களுடைய சொந்த வழிகளைக் கண்டுபிடிப்பது ஏன்?

இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தில் கடவுளைப் புரிந்துகொள்வதற்காக புதியதாக எந்தவொரு வழிமுறையும் உருவாக்கப்படுவதில்லை. இது சீரான மார்க்கத்தை எடுத்துரைத்து வருகின்றது. *மன்-மனா பவ மத்-பக்தோ மத்-யாஜீ மாம் நமஸ்குரு,* ‘‘என்னை நினைத்து, என்னுடைய பக்தனாகி, என்னை வழிபட்டு, எனக்கு முன்பாக விழுந்து வணங்கு,’’ என்று பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறுகிறார். இதே விஷயத்தை நாங்கள் போதிக்கிறோம். இதைக் கடைப்பிடிப்பது கடினமானதல்ல. யார் வேண்டுமானாலும் இதைச் செய்யலாம். சில சமயங்களில், கிருஷ்ண பக்தி இயக்கத்தை உலகம் முழுவதும் பரப்பியதால், நான் அதிசயிக்கத்தக்க செயலைச் செய்ததாக மக்கள் கூறுகின்றனர். ஆனால் நான் செய்தது என்னவெனில், கிருஷ்ணரை உண்மையான முறையில் மக்களுக்கு அளித்தது மட்டுமே. அதுவே இரகசியம். எனவே, பகவத் கீதை மற்றும் ஸ்ரீமத் பாகவதத்தில் இருந்து, யார் வேண்டுமானாலும் கிருஷ்ணரை உள்ளபடி புரிந்துகொண்டு, தன்னுடைய வாழ்க்கையைப் பக்குவப்படுத்திக் கொள்ள முடியும். இதைத் தவிர்த்து கடவுளைப் புரிந்துகொள்வதற்காக நீங்கள் எந்த வழிமுறையை உண்டாக்கினாலும், அது பயனற்ற கால விரயமே.

(தமிழாக்கம்: ஜெய கோவிந்தராம தாஸ்)

# பகவத் கீதை உங்களுடைய செல்போனாக மாறினால்...



நீங்கள் உங்கள் செல்போனைப் போன்று பகவத் கீதையைக் கையாண்டால் எப்படியிருக்கும்?

நம்முடைய பைகளிலும் பாக்கெட்டுகளிலும் பகவத் கீதையை எடுத்துச் சென்றால் எப்படியிருக்கும்?

தினமும் அதனைப் பலமுறை புரட்டினால் எப்படியிருக்கும்?

அதை எடுக்க மறந்துவிட்டால் அதற்காக மீண்டும் வீட்டிற்கு வந்து எடுத்துச் சென்றால் எப்படியிருக்கும்?

அதிலிருந்து அடிக்கடி மெஸேஜ் படித்தால் எப்படியிருக்கும்?

அஃது இல்லாமல் வாழ முடியாது என்று நாம் அதனைக் கையாண்டால் எப்படியிருக்கும்?

நம் குழந்தைகளுக்கு அதனை அன்பளிப்பாக வழங்கினால் எப்படியிருக்கும்?

நமது பயணங்களில் அதை மறக்காமல் எடுத்துச் சென்றால் எப்படியிருக்கும்?

‘‘இணைப்பு தற்காலிகமாக துண்டிக்கப்பட்டுவிட்டது’’ என்ற தகவலை இனிமேல் நாம் கேட்கத் தேவையில்லை. பகவத் கீதையின் சேவை என்றும் துண்டிக்கப்படுவதில்லை, இதற்காக மாதந்தோறும் பணம் கட்ட வேண்டிய தேவை இல்லை.

நீங்கள் கிருஷ்ணரை அழைக்கும்போது அவர் உங்கள் அழைப்பை என்றும் ‘‘கட்’’ செய்ய மாட்டார்.

‘‘சற்று நேரம் கழித்து தொடர்பு கொள்ளவும்’’ என்று மெஸேஜ் வராது, ஏனெனில் கிருஷ்ணர் என்றும் உங்களுக்காக எப்போதும் தயாராக உள்ளார்.

‘‘உம், என் பகவத் கீதை எங்கே?’’ என்று கேட்கத் தூண்டுகிறதா? படியுங்கள் ‘‘பகவத் கீதை உண்மையுருவில்’’

(இணையம் மூலமாகப் பெறப்பட்டது)



# வாமன அவதாரம்

**பரம புருஷ பகவானின் முக்கிய அவதாரங்களில் ஒன்றான வாமன அவதாரம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று அனைத்து மகான்களும் கூறியுள்ளனர். அசுரர்களிடமிருந்து தேவலோகத்தை மீட்டு மீண்டும் தேவர்களிடம் ஒப்படைப்பதற்காக ஒரு பிராமண சிறுவனின் வடிவில் பகவான் தோன்றினார். வாமனர் என்று அறியப்படும் அவரது அவதாரத்தின் சில முக்கிய சிறப்புகளை நாம் இங்கு காண்போம்.**

*வழங்கியவர்: ஸ்ரீ நாராயண தாஸ்*

## கதைச் சுருக்கம்

### தேவ லோகத்தை மாமன்னர் பலி கைப்பற்றுதல்

அமரத்துவம் அடைய விரும்பிய தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதத்தை வரவழைத்தனர். பகவான் விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து, அமுதத்தை தேவர்களுக்குக் கிடைக்கச் செய்தார். அதன் பின்னர் ஏற்பட்ட போரில் இந்திரன் தலைமையிலான தேவர்கள் வெற்றி பெற, பலி மஹாராஜரின் தலைமையிலான அசுரர்கள் தோல்வியுற்று மரணத்தின் அருகில் சென்றனர். (ஸ்ரீமத் பாகவதத்தின் எட்டாவது காண்டத்தின் 5-12 அத்தியாயங்களை விரிவாகப் படித்தல் நன்று) பிருகு வம்சத்தில் வந்த சுக்ராசாரியர், பலி மஹாராஜரிடம் இரக்கம் கொண்டு, அவரை மீண்டும் உயிர்பெறச் செய்தார்.

தேவலோகத்தைக் கைப்பற்ற விரும்பிய மாமன்னர் பலியின் நோக்கத்தை அறிந்த பிருகு வம்ச பிராமணர்கள் அனைவரும் இணைந்து, மன்னருக்காக விஸ்வஜித் யாகத்தை நிறைவேற்றினர். யாகத்தின் பலனாக பலி பலமடங்கு வலிமை பெற்றார். மேலும், சக்தி வாய்ந்த வில், அம்பு, தெய்வீக கவசம், மஞ்சள் நிற குதிரைகள் பூட்டிய தங்க விமானம் முதலியவற்றையும் பெற்றார். அவருடைய பாட்டனாரான பிரஹலாதர் என்றுமே வாடாத மலர்களைக் கொண்ட மாலையையும், சுக்ராசாரியர் உயர்ரக சங்கினையும் பரிசளித்தனர். இவை அனைத்தும் கிடைக்கப்பெற்ற பலி மஹாராஜர் மிகுந்த பராக்கிரமத்துடனும் தேஜஸுடனும் மீண்டும் தேவலோகத்தைக் கைப்பற்ற தன் பரிவாரங்களுடன் படையெடுத்தார்.

அச்சம் கொண்ட இந்திரனும் இதர தேவர்களும் தங்களின் குருவான பிரஹஸ்பதியிடம் முறையிட, அவரோ, "பலி இம்முறை பிராமணர்களின் உதவியுடன் வந்திருப்பதால், உங்களால் அவரை வெல்ல இயலாது. சிலகாலம் தேவ லோகத்திலிருந்து மறைந்து வாழுங்கள்," என்று அறிவுரை கூறினார். அதன்படி தேவர்களும் தேவலோகத்தை விட்டு மறைந்தனர். மாமன்னர் பலி தேவலோகத்தை சுலபமாக கைப்பற்றினார்.

### வாமனரின் தோற்றம்

மகிழ்ச்சியுற்ற பிருகு வம்ச பிராமணர்கள் பலியை நூறு அசுவமேத யாகம் செய்யும்படி அறிவுறுத்தினர். இதற்கிடையில் தேவர்களின் தாயான அதிதி, தன்னுடைய புதல்வர்கள் மறைந்து வாழ்வதை நினைத்து மிக்க கவலையுற்று, தனது கணவர் கஷ்யப முனிவரிடம் தகுந்த உபாயத்தை வேண்டினாள். அவர், "நீ பரம புருஷ பகவானை தியானித்து, கடுமையான பயோ விரதத்தை மேற்கொள்," என்று அறிவுறுத்தினார். அவளும் தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் விரதத்தை மேற்கொள்ள, அவள் முன் தோன்றிய பகவான், "உன் விரதத்தின் பலனாக நான் உமக்கு மகனாகப் பிறந்து தேவலோகத்தை மீட்டு உன் புதல்வர்களைக் காப்பேன்," என்று உறுதியளித்தார். (ஸ்ரீமத் பாகவதத்தின் எட்டாவது காண்டத்தின் பதினாறாவது அத்தியாயத்தில் பயோ விரதம் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளலாம்) அதன்படி, ஸ்ரவண துவாதசி அன்று கஷ்யப முனிவரின் மூலமாக அதிதியின் வயிற்றில் பகவான் தோன்றினார். அவர் பிறந்தவுடன் தேவர்களும் கின்னரர்களும் பூமாரி பொழிந்து தங்களின் ஆத்மார்த்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொண்டனர். சங்கு சக்கர கதா பாணியாக பிறந்த பகவான் குள்ளமான பிராமணராக (வாமனராக) உருமாற அவருக்கு கஷ்யபரும் இதர பிராமணர்களும் உபநயனம் செய்வித்தனர்.

### பலியை வெற்றி கொள்ளுதல்

பலி மஹாராஜரின் யாகம் முடிவடையும் தருவாயில், வாமனர் அவரது யாகசாலைக்குச் சென்றார். அங்கு குழுமியிருந்த பிராமணர்கள், அரக்கர்கள் என அனைவருமே அவருடைய அதி அற்புதமான தோற்றத்தைக் கண்டு மிகவும் வியப்புற்றனர். பலி மஹாராஜரும் மிகவும் மகிழ்ச்சியுற்று, அவரை தகுந்த ஆசனத்தில் அமர வைத்து பாத கமலங்களுக்கு அபிஷேகம் செய்தார். "நான் தங்களுக்காக என்ன செய்ய வேண்டும்?" என்று பலி மஹாராஜர் வினவ, வாமனர் தனக்கு வெறும் மூன்றடி நிலம் தானமாக வேண்டும் என்று யாசித்தார்.

பலி மஹாராஜர் அதைக் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்ட தருணத்தில், அவரது குருவான சுக்ராசாரியர் வந்திருப்பது சர்வ வல்லமை படைத்த பரம புருஷ பகவான் விஷ்ணுவே எனக் கூறி தானமளிக்கக் கூடாது என அறிவுறுத்தினார். ஆனால் தான் கொடுத்த வாக்கினை காப்பாற்றுவேன் என்று கூறி, வாமனருக்கு தானம் கொடுப்பதற்கான சடங்குகளை நிறைவேற்றினார். உடனே, வாமனர் தன் சிறிய ரூபத்தை பன்மடங்காகப் பெருக்கி, தனது ஒரு காலால் கீழுலகங்களையும் மற்றொரு காலால் மேலுலகங்களையும் அளந்தார். மூன்றாவது அடிக்கு என்ன செய்வதென்று வினவ பலி மஹாராஜர் தனது சிரசின் மீது கால் பதித்து தன்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பிரார்த்தித்தார். வாமனரும் தனது திருப்பாதங்களை பலியின் சிரசில் பதித்து தனது அவதார நோக்கத்தை நிறைவேற்றினார்.

# வாமன அவதாரத்திலிருந்து அறிய வேண்டிய சில துளிகள்

### ஆன்மீக குருவின் பலம்

அசுர குருவான சுக்ராசாரியர், மாமன்னர் பலி இறந்துகிடந்த நிலையில், அவரை மீண்டும் உயிர்ப்பித்து தேவையான அனைத்து வலிமையையும் வரவழைத்தார். ஒருவனது சுய வலிமையைவிட ஆன்மீக குருவின் ஆசியும் கருணையும்



தனது இரண்டே அடிகளில் மூவுலகையும் அளந்த வாமனரின் தோற்றம்

மிகுந்த சக்தி வாய்ந்தது என்று இங்கு ஸ்ரீல பிரபுபாதர் விளக்கமளிக்கின்றார். நம்முடைய ஆன்மீக முன்னேற்றத்திற்கு நாம் நமது குருவின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். இந்திரனும் இதர தேவர்களும் பிருஹஸ்பதியின் கட்டளைக்கு இணங்க தலைமறைவானதைப் போல, நாமும் முழுமனதோடு குருவின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். (8.15.28)

### ஆன்மீக குருவை நிராகரித்தல்

குருவினால் கூறப்படும் கருத்துக்கள் சாஸ்திரங்களின் கூற்றுகளுக்கு எதிராக இருக்கும்போது, அந்த குரு நிராகரிக்கப்பட வேண்டியவர். இதனை நாம் மாமன்னர் பலியின் செயல்களிலிருந்து காணலாம். ஒருவர் தன்னிடம் உள்ள அனைத்தையும் முழுமுதற் கடவுளான விஷ்ணுவிற்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அந்த விஷ்ணுவே யாசிக்க வந்திருக்கும்போது, அவருக்கு தானம் வழங்குவதில் எந்தத் தயக்கமும் தேவையில்லை என்று பலி நினைத்தார். ஆனால் சுக்ராசாரியரோ விஷ்ணுவிடம் அனைத்தையும் கொடுத்துவிட்டால், நாம் எங்கு செல்வது? என்ற குறுகிய நோக்கத்துடன், அந்த தானத்தைத் தடுக்க முயன்றார். இந்தச் சூழ்நிலையில் தனது குருவின் அறிவுரையை மீறி, வாமனருக்கு தானமளித்த பலியின் செயல் மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

### வாமனரின் ரூபம்

பகவானின் ரூபத்தை மனதில் நிறுத்துவதால் பரம ஆனந்தத்தை அடைய முடியும் என்று நமது ஆச்சாரியர்கள் உரைத்துள்ளனர். அவருடைய ரூபத்தை தியானிப்பதற்குக் கீழ்க்காணும் வர்ணனை உதவியாக அமையும்.


குள்ளமான பிராமண சிறுவனின் வடிவில் தோன்றிய பகவான் வாமனருக்கு, பிரஹஸ்பதி பூணூல் அணிவித்தார், பூமாதேவி மான்தோல் வழங்கினாள், கஷ்யபர் தர்ப்பைப் புல்லை அணிவித்தார், சந்திரன் பிரம்ம தண்டத்தை வழங்கினார், அதிதிதேவி உள்ளாடைகளை வழங்கினாள், சூரியன் காயத்ரி மந்திரத்தைக் கொடுத்தார், இந்திரன் குடை கொடுத்தார், பிரம்மா கமண்டலம் கொடுத்தார், சரஸ்வதி ருத்திராக்ஷ மாலையைக் கொடுத்தாள், குபேரன் பிச்சை பாத்திரத்தைக் கொடுக்க, பார்வதி அதில் முதலாவதாக பிச்சைப் போட்டாள்.

### தேவைக்கேற்ப வாழுதல்

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு உயிர்வாழியும் தனது தேவைக்கு ஏற்ப வாழ வேண்டும் என்பதையும் பேராசை கொள்ளக் கூடாது என்பதையும் கீழ்காணும் உரையாடலில் இருந்து நாம் அறியலாம்.

**மாமன்னர் பலி:** என்னிடம் யாசித்தவர் அதன்பின் வேறு யாரிடமும் யாசிக்க வேண்டிய தேவை இருக்கக் கூடாது. அதிகமாகக் கேளும்.

**வாமனர்:** கற்றறிந்தவன் தனக்கு தேவையானதை மட்டுமே கேட்க வேண்டும், அப்போது அவன் எவ்விதமான பாவச்




குள்ளமான பிராமணரின் வடிவில் தோன்றிய வாமனரின் தோற்றம் தியானிப்பதற்கு மிகவும் உகந்ததாகும்.

## தமிழகத்திலுள்ள முக்கிய வாமனர் கோவில்கள்

திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம்

திருஊரகம், காஞ்சிபுரம்

திருக்காழிச்சீராம விண்ணகரம், சீர்காழி

திருநீர்மலை, பல்லாவரம், சென்னை



செயல்களிலும் ஈடுபட மாட்டான். தேவைக்கு அதிகமாகக் கேட்பவன் பேராசையை வளர்த்து, பல்வேறு தீய செயல்களில் ஈடுபடுவான்.

புலனடக்கம் இல்லாதவனுக்கு மூவுலகங்களிலுள்ள மொத்த செல்வத்தைக் கொடுத்தாலும், அவன் திருப்தியடைய மாட்டான்.

முற்பிறவியின் பயனால் கிடைக்கப் பெற்ற செல்வத்தில் திருப்தியுற்று சுகமடைய வேண்டும். அதை விடுத்து சுயக் கட்டுப்பாடு இன்றி வாழ்பவன் என்றுமே மகிழ்ச்சியுடன் வாழ மாட்டான்.

இந்த ஜட உலகத்தின் பிறப்பு இறப்பு சுழற்சிக்கான முக்கிய காரணம் இந்த பேராசையே.

### வாக்கு தவறாமை

நேர்மை தவறாத ஓர் இல்லறத்தான், தான் கொடுத்த வாக்கினைக் காப்பது மிகவும் அவசியம், அவன் தன் நிலையிலிருந்து பிறழக் கூடாது. அசுர குலத்தில் தோன்றி இருந்தாலும், மாமன்னர் பலி அதனை நிறைவேற்றினார். அவரது வாசகங்களில் சில,

நிலத்தை தானம் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்த பின்னர், பணத்திற்கான பேராசையால் அதனை எவ்வாறு என்னால் திரும்பப் பெற இயலும்? ஒரு சாதாரண ஏமாற்றுக்காரனைப் போன்று என்னால் எப்படி நடந்துகொள்ள முடியும்? கொடுத்த சத்தியத்தை மீறுவதைக் காட்டிலும் பாவகரமானது ஏதுமில்லை. பொய் சொல்பவனைத் தவிர வேறு எந்த கனமான பொருளையும் பூமியினால் தாங்க முடியும்.

பிராமணரை ஏமாற்றுவதைவிட, நரகத்திற்குச் செல்வதும் மரணத்தைச் சந்திப்பதும் மேல்.

திரு. ஸ்ரீ நாராயண தாஸ், கணிப்பொறி வல்லுநரான இவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் சென்னையில் வசித்தபடி கிருஷ்ண பக்தியைப் பயிற்சி செய்து வருகிறார்.




பிருதாவின் மகனே, பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என கீழ் குலத்தைச் சார்ந்தவர்கள் யாராக இருந்தாலும், என்னிடம் சரணடைபவர்கள் பரமகதியை அடைய முடியும்.

—பகவத் கீதையில் (9.32) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்




## கருத்து

**கொல்லன் தனது சுத்தியலால் இரும்பை அடிக்கும் முறையும் குயவன் பானையை அடிக்கும் முறையும் வேறு. அவை இரண்டிற்குமான முறையும் நுட்பமும் வேறுபட்டவை.**

**பகவானின் திருப்திக்காக தூய பக்தித் தொண்டில் ஈடுபட்டுள்ள பக்தனின் செயல்களையும், ஜட வாழ்வில் இருப்பவனின் புலனின்பச் செயல்களையும் ஒரு பௌதிகவாதி சமமாகக் காண்கிறான். ஆனால் உண்மையில் அவ்விரண்டு செயல்களுக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளன. பெயரளவிலான பௌதிகச் செயல்கள் பகவானுடைய பக்தித் தொண்டிற்கு சாதகமாக இல்லையெனில், அவற்றால் எந்த நன்மையும் இல்லை. முழுமுதற் கடவுளின் திருப்திக்காக தூய பக்தரால் ஆற்றப்படும் செயல்களுடன் ஒப்பிடும்போது, பக்தியும் சரணாகதியும் இன்றி பஞ்ச உபாசனத்தில் ஈடுபடும் மாயாவாதியின் செயல் நன்மை தருவதாக இல்லை, மாறாக, அத்தகு பஞ்ச உபாசன வழிபாடு தீமையையே கொடுக்கின்றது.**

## இப்பத்திரிகையின் குறிக்கோள்

• உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல் • ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல் • ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல் • வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல் • பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல் • முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி


## பெருமை மிக்க வைஷ்ணவ ஆச்சாரியர்

ரூபர், ஸநாதனர், ரகுநாத தாஸர், ரகுநாத பட்டர், கோபால பட்டர், ஜீவர் ஆகிய ஆறு கோஸ்வாமிகள் பகவான் சைதன்யரின் முதன்மையான சீடர்களாவர். பகவத் தரிசனத்தின் வாசகர்களுக்காக, இதோ இங்கே ஸ்ரீல ஜீவ கோஸ்வாமியின் வாழ்க்கை வரலாற்றினைப் படைக்கின்றோம்.

வழங்கியவர்: நித்யானந்த தாஸ்

### ரூபரும் ஸநாதனரும் சைதன்யரைக் காண ஏங்குதல்

சுமார் 500 வருடங்களுக்கு முன்பு, வங்காளத்தின் தலைநகரமான ராமகேலி எனும் இடத்தில் நவாப் ஹுசேன் ஷா என்பவரின் ஆட்சியில் ரூபரும் ஸநாதனரும் அமைச்சர்களாகப் பணிபுரிந்து வந்தனர். அவர்கள் பிறப்பால் உயர்ந்த பிராமணர்களாக இருந்தபோதிலும், சமூக நெருக்கடியினால் மிலேச்ச அரசருக்குக் கீழ் பணிபுரியும் நிலையில் இருந்தனர். எனினும், அவர்கள் தங்களின் உள்ளுணர்வின் மூலமாக, ராதையும் கிருஷ்ணரும் இணைந்து ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவாக தோன்றியுள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. எனவே, "நாங்கள் உங்களை அடைவதற்கும் உங்களுக்குத் தொண்டு செய்வதற்கும் என்ன செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துங்கள். நாங்கள் தற்போது மிகவும் தாழ்ந்த வருந்தத்தக்க நிலையில் இருக்கின்றோம்," என்று அவர்கள் மஹாபிரபுவிற்குக் கடிதம் எழுதினர். மஹாபிரபுவிடமிருந்து அக்கடிதத்திற்கான பதில் உடனடியாக வரவில்லை.



இறுதியில், மஹாபிரபு மறைமுகமான பதிலை அனுப்பினார்: "திருமணமான ஒரு பெண்ணிற்கு வேறொரு ஆணுடன் தொடர்பு ஏற்பட்டால், அவள் தன்னுடைய பணிகளை சந்தேகத்திற்கு இடம் தராமல் மிகவும் நன்றாகச் செய்வாள். இருப்பினும், அவள் தன் மனதில் எப்போதும் தனது கள்ளக் காதலரை நினைத்தபடி, அவரைப் பார்ப்பதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பாள்."

தங்களுடைய தூய்மையான பக்தித் தொண்டினால் ரூபரும் ஸநாதனரும் பகவான் சைதன்யர் அனுப்பிய கடிதத்தின் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது. வெகுவிரைவில் மஹாபிரபுவின் அருள் கிட்டும் என்றும், அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்படுவர் என்றும், தற்பொழுது சாதாரண நல்ல அமைச்சர்களைப் போன்று நடிக்க வேண்டும் என்றும் புரிந்து கொண்டனர்.

### சைதன்யரைச் சந்தித்தல்

அதன்படி, 1511ஆம் ஆண்டு மஹாபிரபு ஜகந்நாத பூரியிலிருந்து விருந்தாவனத்திற்குப் புறப்பட்டார். நேர் வழியில் செல்லாமல் பகவான் சைதன்யர் சுற்று வழியில் பயணம் செய்ததன் காரணத்தை யாரும் அறியாதபட்சத்தில், அவர் ராமகேலியை அடைந்தார். அங்கு ரூபர், ஸநாதனர், அவர்களின் இளைய சகோதரரான அனுபமர் ஆகியோர் மஹாபிரபுவைக் காண அவரது இருப்பிடத்திற்கு இரவில் இரகசியமாகச் சென்றனர். அப்போது சிறு குழந்தையாக இருந்த அனுபமரின் மகனான ஜீவ

கோஸ்வாமி, சைதன்ய மஹாபிரபுவின் அசாதரணமான குணங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால், தன் தந்தையை இரகசியமாகப் பின்தொடர்ந்து அங்கு சென்றார். அவர்களுக்குள் நடந்த அன்புப் பரிமாற்றங்களைத் தொலைவிலிருந்து கண்டார்.

பகவான் கௌரசுந்தரின் உருக்கிய தங்கத்தை ஒத்த அழகிய மேனியையும் அவருடைய அசாதாரணமான அழகையும் ஜீவர் கண்டார். சாக்ஷாத் கிருஷ்ணரேயான பகவான் சைதன்யர் ராதாராணியின் மேனி நிறத்தில் தோன்றியிருப்பதைக் கண்டார். மஹாபிரபுவின் தாமரை போன்ற கண்களும் முட்டிக்கு கீழே நீண்டிருந்த கரங்களும் மிகவும் அழகாகவும் நுண்மையாகவும் தோன்றின. அவரது சரீர அழகானது, ஜீவரை மயக்கி மனதில் எல்லையற்ற பேரன்பை உண்டாக்கியது. ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் இந்த அழகான காட்சியை அவரால் மறக்க முடியவில்லை. அதே சமயத்தில் நித்யானந்தரின் அழகைக் கண்டுகளிக்கும் வாய்ப்பையும் அவர் பெற்றார். (சைதன்ய மஹாபிரபுவை ஜீவர் தனது சிறுவயதில் கண்டதாகக் கூறப்படும் இந்நிகழ்ச்சி சிலரால் மறுக்கப்படுகிறது)

## விருந்தாவனத்தில் ரூபர், ஸநாதனர்

இந்நிகழ்ச்சிக்குப் பின், சில காலம் கழித்து, ஜீவரின் தந்தையான அனுபமர் கௌராங்கரைச் சந்திப்பதற்காக ரூபருடன் இணைந்து பயணித்தார். செல்லும் வழியில், வங்காளத்தின் கங்கைக் கரையில் அனுபமர் இப்பூவுலகத்தை விட்டு ஆன்மீக உலகைச் சென்றடைந்தார். சிறு குழந்தையாக இருந்த ஜீவ கோஸ்வாமிக்குத் தனது தந்தையின் மரணம் பெரும் துக்கத்தைக் கொடுத்தது. அவர் தன் தந்தையை, தந்தையாக மட்டுமல்லாமல் சிறந்த வைஷ்ணவராகவும் நேசித்து வந்தார்.

ரூபரும் ஸநாதனரும் கௌராங்க மஹாபிரபுவின் கட்டளைக்கிணங்கி விருந்தாவனத்தில் தங்கினர். சைதன்ய மஹாபிரபு அவர்களிடம், வைஷ்ணவர்களுக்கு உதாரணமாக விளங்கி அவர்கள் பின்பற்ற வேண்டிய நடத்தைகளை வகுக்க வேண்டும் என்றும், வேத சாஸ்திரங்களின் சாரத்தை எடுத்து தூய பக்தியே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை நிலைநாட்ட வேண்டும் என்றும், விருந்தாவனத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனது அற்புத லீலைகளை நடத்திய புண்ணிய க்ஷேத்திரங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும், கோவில்களை நிறுவி முறையான விக்ரஹ வழிபாட்டினை நிலைநிறுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

## ஜீவ கோஸ்வாமியின் ஏக்கம்

ரூபரும் ஸநாதனரும் விருந்தாவனத்தில் இருந்தபோது, ஜீவ கோஸ்வாமி, "நான் எப்பொழுது விருந்தாவனம் சென்று ரூபரையும் ஸநாதனரையும் சந்திப்பேன்? அந்த நாள் எப்போது வரும்?" என்று ஏங்கிய வண்ணம் வாழ்ந்தார். ரூப கோஸ்வாமி, ஸநாதன கோஸ்வாமி ஆகியோரின் மீதான மாபெரும் ஆர்வத்தினால், ஜீவர் பௌதிக விஷயங்களில் ஆர்வமின்றி இருந்தார். அவருடைய குடும்பம் மிகுந்த செல்வாக்குடையதாக இருந்தது, அழகிய ஆடை ஆபரணங்களும் அனைத்து வசதிகளும் அவருக்குக் கொடுக்கப்பட்டன. ஆனால் அவரோ அவை எல்லாவற்றையும் அலட்சியம் செய்தார். அவருடைய நண்பர்கள் நன்றாக விளையாடும்போது, அவருக்கு அதில் துளியும் ஈடுபாடு ஏற்படவில்லை. அவர் தன் சிறுபிராயத்திலிருந்தே கிருஷ்ண பலராமரின் பக்தியில் மட்டுமே ஆர்வம் கொண்டிருந்தார். கிருஷ்ண பலராமரின் சிறு விக்ரஹங்களைச் செய்து, அவர்களுக்கு சேவை செய்வதிலேயே தன் பொழுதைக் கழித்தார். விக்ரஹங்களுக்கு சுவைமிகு இனிப்புகளைப் படைத்து சாஷ்டாங்க நமஸ்காரங்களை சமர்ப்பிப்பார். அவர்களுக்கு ஆபரணங்கள், ஆடைகள், மலர்மாலைகள் செய்து மகிழ்வார். "ஓ, கிருஷ்ண! ஓ பலராம்! நான் எப்பொழுது ரூப, ஸநாதன கோஸ்வாமிகளைக் (விருந்தாவனத்தில்) காணும் நாள் வரும்?" என்று எப்போதும் பிரிவால் ஏங்குவார். இரவில் தூங்கச் செல்லும் போதுகூட கிருஷ்ண பலராம விக்ரஹங்களை தன் மார்போடு அரவணைத்தபடி படுத்து உறங்குவார்.

## கனவில் சைதன்ய மஹாபிரபு தோன்றுதல்

கௌராங்க மஹாபிரபு மற்றும் அவரது சீடர்களின் பிரிவால் ஜீவர் மிகுந்த துயரத்தில் இருந்தபோதிலும், அவ்வப்போது தன்னைத்தானே தேற்றிக் கொண்டு வாழ்ந்தார். அவருடன் இருந்த மக்களோ, "இந்த ஜீவன் தனது தந்தையின் மரணத்திற்குப் பின் எப்பொழுதும் அழுத வண்ணமாக இருக்கிறான்," என்று எண்ணி பரிதாபப்பட்டனர். அவரோ, கண்களில் இடைவிடாத ஆனந்தக் கண்ணீருடன், தன் கிருஷ்ண பலராம விக்ரஹங்களுக்கு சேவை செய்து கொண்டிருந்தார். பரவசத்தினால் எழக் கூடிய மன எழுச்சியை அவர் பெரும் பாலும் மறைத்துவிடுவார்.

ஒருநாள், ஜீவ கோஸ்வாமி பகல் முழுவதும் பகவானுக்கு அன்புத் தொண்டு

**"ஓ, கிருஷ்ண! ஓ பலராம்! நான் எப்பொழுது ரூப, ஸநாதன கோஸ்வாமிகளைக் (விருந்தாவனத்தில்) காணும் நாள் வரும்?" என்று எப்போதும் பிரிவால் ஏங்குவார். இரவில் தூங்கச் செல்லும்போதுகூட கிருஷ்ண பலராம விக்ரஹங்களைத் தன் மார்போடு அரவணைத்தபடி படுத்து உறங்குவார்.**

செய்து கொண்டிருந்த நிலையில், இரவு வந்தது. இந்த இரவில் ஜீவரால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் தனது ஆழ்மனதிலிருந்து பிரார்த்தித்தார்: ''பகவானே! கௌரசந்திர! நித்தியானந்த பிரபு! அத்வைத பிரபு! என்னிடம் தயை காட்டுங்கள்!'' அவர் உறக்கமின்றி இரவு முழுவதும், விம்மிக் கொண்டும் அழுது கொண்டும் இருக்க, இறுதியில் இரவுப் பொழுது முடியும் தருவாயில் உறங்கிப் போனார்.

அப்போது அவர் மிக அற்புதமான கனவு ஒன்றைக் கண்டார். அக்கனவில், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு, நித்யானந்தர், அத்வைதர், ஸ்ரீவாஸர், ஹரிதாஸர் மற்றும் அனைவரும் அற்புதமான நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டிருந்தனர். மஹாபிரபுவின் தங்கமயமான ரூபத்தைக் கண்டு, ஜீவ கோஸ்வாமி தனது மனதில் பரம ஆனந்தத்தை அனுபவித்தார். பகவான் சைதன்ய மஹாபிரபு பாடி ஆட, அவருடன் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், ஒருங்கே சேர்ந்து மஹாமந்திரத்தை எதிரொலித்தனர்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே

சற்று நேரம் கழித்து, கனவு கலைந்தது. விழித்தெழுந்த ஜீவர், மஹாபிரபுவைக் காண முடியாமல் சிதறிய மனதுடன், ''எம்பெருமானே, நீங்கள் எங்கே? எங்கு இருக்கிறீர்கள்? எங்கே மறைந்தீர்கள்?'' என்று கீழே விழுந்து புரண்டார், பிரிவால் மனம் வாட பகவானின் அருளால் மீண்டும் உறங்கிப் போனார். இம்முறை, அவர் அன்றாடம் வழிபடும் கிருஷ்ண பலராமர், தங்களுடைய சுய ரூபத்தில் அவருக்குக் காட்சியளித்தனர். கிருஷ்ணர் அழகிய நீல வர்ண மேனியில், தங்க கிரீடம், தாமரை மலர் போன்று மலர்ந்த கண்கள், தலையில் மயில் தோகை, அற்புதமான ஆபரணங்கள், மற்றும் மலர் மாலைகளை அணிந்து சியாமசுந்தரராகத் தோன்றினார். வெண்மை நிற மேனியுடன், அழகிய நீலநிற ஆடை அணிந்து, அன்றலர்ந்த மலர்கள் மற்றும் ஆபரணங்களுடன் பலராமர் தோன்றினார். அவர்கள் இருவரும் மிகுந்த அன்புடன், சிறுவன் ஜீவரை நோக்க, அவரும் அவர்களுடைய பரிபூரண கருணையில் மூழ்கினார்.



நவத்வீபத் தாமத்தை ஜீவ கோஸ்வாமிக்கு நித்யானந்த பிரபு சுற்றிக் காட்டுதல்

பிறகு, பலராமர் நித்யானந்த பிரபுவாக மாற, ஸ்ரீ கிருஷ்ணர் கௌரசுந்தரராக மாறினார். ஜீவர் தன் சாஷ்டாங்க நமஸ்காரங்களை சமர்பித்து, அவர்களின் பொற்பாத கமலங்களைத் தனது சிரசில் வைத்து வணங்கினார். சைதன்ய மஹாபிரபு ஜீவ கோஸ்வாமியிடம், ''நான் உன்னை நித்யானந்த பிரபுவின் பொறுப்பில் ஒப்படைக்கிறேன். நீ அவருடைய சொத்து,'' என்று கூற, நித்யானந்த பிரபு ஜீவரிடம், ''பகவான் கௌராங்கரை உன் இறைவனாக வழிபடுவாயாக'' என்று கூறினார்.

## நவத்வீபம் செல்லுதல்

இந்த அற்புதமான தரிசனத்திற்குப் பின்னர், ஜீவரின் கனவு முடிவுற்றது. குடும்பப் பற்றுதலை முற்றிலுமாகத் துறந்து விருந்தாவனத்திற்கு ஓட நினைத்தார். ஆனால் பரமாத்மாவினால் தூண்டப்பட்டு, நவத்வீபத்திற்குச் சென்று கௌராங்க மஹாபிரபுவின் ஆரம்ப கால லீலைகள் நடைபெற்ற இடங்களை தரிசிக்க ஆவல் கொண்டார். நித்யானந்த பிரபு நவத்வீபத்தில் வசித்து வருவதையும் அவர் நன்கறிவார். நவத்வீபத்தில் ஸ்ரீ ஜீவ கோஸ்வாமியின் உள்ளார்வத்தை நிறைவேற்ற, அவரை நவத்வீப தாமம் முழுவதும் நித்யானந்த பிரபு யாத்திரையாக அழைத்துச் சென்றார். பிற்காலத்தில், ஸ்ரீல பக்திவினோத தாகூர் தனது தெய்வீகப் பார்வையின் மூலம், அவர்களது யாத்திரையின் பல்வேறு விளக்கங்களை தனது *நவத்வீப தாம மஹாத்மியம்* என்னும் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

## வாரணாசிக்குச் செல்லுதல்

அதன் பின்னர், நித்யானந்த பிரபு ஜீவரிடம் விருந்தாவனத்திற்குச் சென்று ரூப ஸநாதனரிடம் தஞ்சமடையும்படி கட்டளையிட்டார். ''விருந்தாவனம் சைதன்ய மஹாபிரபுவினால் உங்களுடைய குடும்பத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, நீ அங்குச் செல்வது அவசியம். விருந்தாவனத்திற்குச் செல்லும் வழியில் வாரணாசிக்குச் (காசிக்குச்) செல். அங்கு ஸார்வபௌம பட்டாசாரியரின் சீடரான மதுசூதன வாசஸ்பதியிடமிருந்து

சாஸ்திரங்களைக் கற்றுக் கொள்.” நித்யானந்த பிரபுவின் கட்டளைப்படி வாரணாசிக்கு சென்ற ஜீவர், அங்கு மதுசூதன வாசஸ்பதியின் மாணவரானார். குறுகிய காலத்தில், வாரணாசியில் மட்டுமின்றி எல்லாவிடங்களிலும் ஒரு மிகச்சிறந்த பண்டிதனாகப் புகழ் பெற்றார். அவருடைய ஆழ்ந்த வேதாந்தக் கல்வியும் சாஸ்திரப் புலமையும் அவரை மிகவும் பிரபலமாக்கின.

## விருந்தாவனம் செல்லுதல்

வாரணாசியில் கல்வி கற்ற பின்னர், தனது நீண்ட நாள் ஆசையை நிறைவேற்ற, ஜீவ கோஸ்வாமி விருந்தாவனத்தை நோக்கிப் புறப்பட்டார். விருந்தாவனத்தில் அவர் தனது அன்பிற்குரிய பெரிய தந்தையர்களைச் சந்தித்தார். ஸநாதனரே வயதில் மூத்தவர் என்பதால், ஸநாதனரிடம் சரணடைந்த ஜீவர் தன்னை அவரது சீடனாக ஏற்று தீக்ஷை தரும்படி வேண்டினார். ஆனால், ஸநாதன கோஸ்வாமியோ அவரை ஸ்ரீல ரூப கோஸ்வாமியிடம் தீக்ஷை பெறுமாறு கூற, அவரும் அதற்கு உடன்பட்டார். ரூப கோஸ்வாமி அதற்கு ஒப்புக் கொண்டாலும், உடனடியாக தீக்ஷை தராமல், ஒரு சிறப்பான சீடன் எப்படி வாழ வேண்டும் என்ற பயிற்சிக்கு பிறகு தீக்ஷை தருவதாகக் கூறினார்.

## ரூப கோஸ்வாமியின் சேவையில் ஜீவர்

ஜீவ கோஸ்வாமி ஒரு தூய பக்தராகவும், வேத சாஸ்திரங்களில் வல்லவராகவும், பௌதிக ஆசைகளை முற்றிலும் துறந்தவராகவும் இருந்தார். இருப்பினும், ஸ்ரீல ரூப கோஸ்வாமி அவரை மிகவும் சாதாரண பணிகளில் ஈடுபடுத்தினார். சில சமயங்களில், ராதா கோவிந்த விக்ரஹ வழிபாட்டிற்குத் தேவையான பொருட்களை ஏற்பாடு செய்தல், மலர்மாலை தொடுத்தல், இடங்களை சுத்தம் செய்தல், ரூப கோஸ்வாமியின் பாத கமலங்களை பிடித்துவிடுதல், எழுதுவதற்காக ஆலிலைகளை ஏற்பாடு செய்தல், எழுதுகோல் (எழுத்தாணி) செய்தல் போன்ற பல சேவைகளில் ஜீவர் ஈடுபட்டார்.

என்னே, ஜீவ கோஸ்வாமியின் உயர்ந்த நிலை! நாமும் ஆறு கோஸ்வாமிகளைப் பின்பற்ற வேண்டுமெனில், இந்த முக்கிய கொள்கையைப் பின்பற்ற வேண்டும். நாம் எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும், புகழ், பெரும் கல்வி என்று என்னதான் இருந்தாலும், நாம் நம்மை சாதாரண சேவைகளுக்கு மட்டுமே தகுந்தவராகக் கருதி, சேவகர்களுக்கு சேவகர்களுக்கு சேவகர்களாகப் பார்க்க வேண்டும். இதுவே வைஷ்ணவருக்கான அடையாளம். இந்த வைஷ்ணவ உணர்வே ஸ்ரீ ராதா தாமோதரரின் கருணையைப் பெறுவதற்கான வழியாகும். ஜீவ கோஸ்வாமி ஆற்றிய எளிமையான சேவைகளில் மகிழ்ச்சியுற்ற ரூப கோஸ்வாமி, அவருக்கு கௌடீய வைஷ்ணவ சம்பிரதாய முறைப்படி தீக்ஷை வழங்கினார்.

## ராதா தாமோதரரை வழிபடுதல்

1542ஆம் ஆண்டு ரூப கோஸ்வாமி, தன் கைகளால் ஒரு விக்ரஹத்தை வடிவமைத்து, அவருக்கு ஸ்ரீஸ்ரீ ராதா தாமோதரர் என்று பெயரிட்டு பிரதிஷ்டை செய்து வழிபட்டார். ஜீவ கோஸ்வாமியிடம் மிகுந்த அன்பு கொண்டமையால், அந்த விக்ரஹங்களை அவரிடம் ஒப்படைத்தார். அவரும் ஆழ்ந்த அன்புடனும் பக்தியுடனும் அவர்களை வழிபட்டார். நரஹரி சக்கரவர்த்தி தாகூர் தான் எழுதிய *பக்தி ரத்னாகர்* என்னும் நூலில், இந்த விக்ரஹங்களின் மீது ஜீவ கோஸ்வாமி கொண்டிருந்த அன்பை எடுத்துரைத்துள்ளார்.

ஜீவ கோஸ்வாமியின் பக்தியில் மகிழ்ந்த ராதா தாமோதரர் அவருடன் நேராகப் பேசுவார். “எனக்கு பசிக்கின்றது, தயவுசெய்து உணவு கொடு,” என்று தாமோதரர் கூற, ஜீவ கோஸ்வாமியும் உடனே தளிகை செய்து மிகுந்த அன்புடன் நைவேத்யம் செய்வது வழக்கம். தாமோதரரின் கருணையால், அவர் உணவு உண்பதை ஜீவ கோஸ்வாமியால் நேரில் பார்க்க முடிந்தது.

ஒருநாள், இனிய வேணு கானத்தை ஜீவ கோஸ்வாமி கேட்க நேர்ந்தது. “ஜீவரே! இங்கு வா, உனக்காக புல்லாங்குழல் வாசிக்கின்றேன்” என்று தாமோதரர் கூற, உடனே அவரும் தாமோதரரிடம் விரைந்து வந்தார். அங்கே, தாமரை போன்ற கண்கள், தலையில் மயில் தோகை, கழுத்தைச் சுற்றி காட்டு மலர்கள், மேனி முழுவதும் அழகிய



விருந்தாவனத்திலுள்ள ஸ்ரீ ஸ்ரீ ராதா தாமோதரர் கோவில்

ஆபரணங்கள் என தனது பக்தனின் மகிழ்ச்சிக்காக தாமோதரர் அழகிய உருவத்தில் காட்சியளித்தார். மேலும், தாமோதரர் தனது புல்லாங்குழலில் இனிய கானம் இசைத்துப் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் இருந்தார். அதைக் கண்ட ஜீவ கோஸ்வாமி, பரவசத்தால் சுய நினைவின்றி விழுந்தார். மீண்டும் நினைவு திரும்பியபோதும், அவரால் தனது ஆழ்ந்த பரவச நிலையிலிருந்து எழ முடியாமல் தவித்தார்.

## மாமன்னர் அக்பருடனான தொடர்பு

ஒருமுறை மாமன்னர் அக்பர், விருந்தாவனத்திற்கு வருகை புரிந்த போது, ஸ்ரீ ஜீவ கோஸ்வாமியின் தரிசனம் கிடைக்கப் பெற்று, மனமாற்றம் அடைந்தார். மன்னருக்கு விருந்தாவனத்தின் அருமை பெருமைகள் எடுத்துரைக்கப்பட்டன. ஜீவ கோஸ்வாமி யின் கட்டளைக்கு இணங்க அவரும் அவருடைய மந்திரிகள், தளபதிகள் என அனைவரும், விருந்தாவனத்தை நல்ல ஒரு யாத்திரை ஸ்தலமாக மாற்றுவதற்கு மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டனர். ராதா கோவிந்தர் திருக்கோவில், ராதா தாமோதரர் திருக்கோவில், ஜுகல கிஷோர் திருக்கோவில், ராதா கோபிநாதர் திருக்கோவில் என பல்வேறு கோயில்களின் கட்டுமானப் பணிகளுக்கு அவர்கள் பெரிதும் உதவினர்.

## இலக்கியப் பணிகள்

தத்துவங்களை விளக்கி ஜீவ கோஸ்வாமி இயற்றிய இலக்கியங்கள் அவரது சேவைகளில் தலைசிறந்து நிற்கின்றன. *ஸட் ஸந்தர்பம், கோபால சம்பூ* உட்பட சுமார் இருபத்தைந்து புத்தகங்களின் வழியாக 4,00,000க்கும் மேற்பட்ட சமஸ்கிருத ஸ்லோகங்களை அவர் நமக்கு நல்கியுள்ளார். யாராலும் தோற்கடிக்கப்பட முடியாத வகையில் தக்க வேத பிரமாணங்களையும் (சாட்சிகளையும்) வலுவான நியாயத்தையும் கொண்டு, சைதன்ய மஹாபிரபுவின் தத்துவங்களை இதுவரை எவரும் செய்யாத வகையில், ஸ்ரீல ரூப கோஸ்வாமியின் கட்டளைப்படி ஜீவ கோஸ்வாமி நிலைநாட்டினார். எனவே, நம்முடைய இயக்கத்தின் தத்துவங்களை நிலைநாட்டிய பெருமை அவரையே சேரும்.



*ஸ்ரீ ஜீவ கோஸ்வாமியினால் வழிபடப்பட்ட ஸ்ரீ ஸ்ரீ ராதா தாமோதரர்*

மேலும், அவர் ராதா தாமோதரர் கோவிலில் ஒரு நூலகம் அமைத்து, அதில் ரூபர், ஸநாதனர், ரகுநாத தாஸர், கிருஷ்ண தாஸ கவிராஜர், கோபால பட்டர் ஆகியோரின் இலக்கியங்களைப் பத்திரப்படுத்தினார்.

இவ்வுலகிலுள்ள அனைத்து தத்துவங் களிலும் கௌடீய வைஷ்ணவ தத்துவமே சிறந்தது. மனித குல வரலாற்றில் தோன்றிய தத்துவவாதிகளுள் ஜீவ கோஸ்வாமி தன்னிகரற்று திகழ்கிறார். ஸ்ரீல ரூப கோஸ்வாமியும் ஸ்ரீல ஸநாதன கோஸ்வாமியும் இப்பூவுலக லீலைகளை முடித்துவிட்டு, சைதன்ய மஹாபிரபுவின் நிரந்தர இருப்பிடத்திற்குத் திரும்பிய பின்னர், ஸ்ரீ ஜீவ கோஸ்வாமியை கௌடீய வைஷ்ணவ சம்பிரதாயத்தின் ஆச்சாரியராக ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணரே அங்கீகரித்தனர். வங்காளத்திலும் விருந்தாவனத்திலும் அப்போது பல்வேறு ஆச்சாரியர்கள் இருந்தபோதிலும், ஜீவ கோஸ்வாமியே மிகவும் முக்கியமான வராக ஏற்றுக்கொள்ளப்பட்டு, கௌடீய வைஷ்ணவர்களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜீவ கோஸ்வாமியின் திருப்பணிகள் இன்றுவரை அவரைப் பின்பற்றுவோரால் பாதுகாக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகின்றன.

(தமிழாக்கம்: சுகோபி தேவி தாஸி)

# எல்லோருக்கும் வேலை கிடைக்க வேண்டும்

**தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் தமது சீடர்களில் ஒருவருடன் 1974ஆம் ஆண்டு, சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவா நகரத்தில் பரிமாறிக் கொண்ட கருத்துகள்**

**சீடர்:** சமீபத்தில் இந்தியாவிலுள்ள ஓர் அரசியல்வாதி, தமது சொற்பொழிவில், இந்திய மக்களில் எட்டு சதவிகிதத்தினர் கிராமப்புறங்களில் வசிப்பதாகவும், விளைநிலங்களில் தொழில் நுட்பத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே தனது விருப்பம் என்றும், கோதுமையைக் கையால் அறுவடை செய்வதற்குப் பதிலாக அறுவடை இயந்திரத்தையும் காளைகளைப் பூட்டி ஏர் உழுவதற்குப் பதிலாக டிராக்டர்களையும் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இந்தியாவிலுள்ள பலர் ஏற்கனவே வேலையின்றி இருப்பதால், அதிகமான இயந்திரங்களைப் புகுத்துவது நல்ல திட்டமல்ல. நூறு மனிதர்களால் செய்யப்படும் ஒரு வேலையை இயந்திரத்தைக் கொண்டு ஒரு மனிதன் செய்துவிடமுடியும். ஆனால் மீதமுள்ள மனிதர்கள் வேலையின்றி இருக்க வேண்டுமா? ஒரு மனிதனை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக நூறு மனிதர்களை ஏன் ஈடுபடுத்தக் கூடாது?

இங்கு மேற்கத்திய நாடுகளில்கூட வேலையின்மை அதிகமாக உள்ளது. அனைத்தும் இயந்திரத்தால் செய்யப்படுவதே இதற்கு காரணம். எந்த வேலையும் கிடைக்காமல் விரக்தியடையும் இளைஞர்கள் ஹிப்பிகளாக உருவெடுக்கின்றனர், நீங்கள் ஏராளமான ஹிப்பிகளை உருவாக்குகிறீர்கள். இது மற்றொரு வகையான வேலையின்மையே. இவ்வாறாக, இயந்திரமயத்தினால் பல விதங்களில் வேலையின்மை உருவாகின்றது.

அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் தொந்தரவுதான். "இயங்காத மூளை பேய்களின் தொழிற்கூடம்." ஏராளமான மனிதர்கள் வேலையில்லாமல் இருக்கும்போது வேலையின்மையை அதிகரிக்க நாம் ஏன் இயந்திரங்களைப் புகுத்த வேண்டும்? வேலையின்றி எவரும் இருக்கக் கூடாது என்பதே சிறந்த கொள்கையாகும். ஒவ்வொருவரும் எப்போதும் வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

**சீடர்:** ஆனால், அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும் வேலையிலிருந்து இயந்திரங்கள் நம்மை விடுவிக்கின்றன என்று சிலர் வாதிடக்கூடும்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** எதற்காக விடுபட வேண்டும்? குடிப்பதற்கும் முட்டாள்தனமான செயல்களைச் செய்வதற்குமா? விடுபடுதல் என்பதற்கான பொருள் என்ன? நீங்கள், கிருஷ்ண உணர்வை வளர்ப்பதற்காக மக்களை விடுவிப்பது என்பது வேறு விஷயம். கிருஷ்ண பக்தி இயக்கத்திற்கு வருபவர்கூட, முறையாக இயக்கத்தின் பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இந்த இயக்கம் உண்பதற்கும் உறங்குவதற்காகவும் அல்ல, மாறாக கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, கிருஷ்ண உணர்விலும் சரி, வெளிச் சமுதாயத்திலும் சரி. அனைவருக்கும் வேலை தரப்பட்டு, அவர்கள் அதில் எப்போதும் ஈடுபட்டிருக்க



வேண்டும் என்பதே கொள்கையாக இருக்க வேண்டும். அப்போது நல்லதொரு கலாச்சாரம் வளரும்.

ஒவ்வொருவரும் பிராமணர் (புத்திகூர்மையுள்ளவர் அல்லது போதகர்), சத்திரியர் (போர் வீரர் அல்லது அரசியல் தலைவர்), வைசியர் (விவசாயி அல்லது வணிகர்), அல்லது சூத்திரர் (பணியாளர்) என்று ஏதேனும் ஒரு பணியில் ஈடுபட்டிருப்பதை கண்காணிக்க வேண்டியது, வேத கலாச்சாரத்தின்படி நாட்டின் தலைவருடைய கடமையாக இருந்தது. அனைவரும் வேலை செய்ய வேண்டும், அப்போதுதான் அங்கு அமைதி நிலவும். ஆனால் தற்போது வளர்ந்துள்ள தொழில்நுட்பத்தின் காரணத்தினால், வேலையின்மையையும் சோம்பேறி மனிதர்களையும் நாம் காண முடிகிறது. ஹிப்பிகள் வெறும் சோம்பேறிகள். அவர்கள் எதையும் செய்ய விரும்புவதில்லை.

**சீடர்:** தொழில்நுட்பத்தினால் நாம் நல்லமுறையில் மிகுந்த திறமையுடன் வேலை செய்ய முடியும் என்றும், அப்படி வேலை செய்பவர்களால் உற்பத்தி உயர்கின்றது என்றும் மற்றொரு வாதம் இருக்கக்கூடும்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** குறைந்த திறனுடன் வேலை செய்தாலும் பரவாயில்லை, அதிகமான மனிதர்களுக்கு வேலை தருவதே சிறந்தது. பகவத் கீதையில் (18.48) கிருஷ்ணர் கூறுகிறார்:

ஸஹ-ஜம் கர்ம கௌந்தேய ஸ-தோஷம் அபி ந த்யஜேத்
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேனாக்னிர் இவாவ்ருதா:

“நெருப்பு புகையால் சூழப்பட்டிருப்பதைப் போல, ஒவ்வொரு முயற்சியும் ஏதேனும் ஒரு தோஷத்தால் சூழப்பட்டுள்ளது. எனவே, குந்தியின் மகனே, தோஷம் (குற்றம்) நிறைந்ததாக இருந்தாலும், தனது இயற்கையிலிருந்து தோன்றிய தொழிலை ஒருவன் துறக்கக் கூடாது.”

இந்தியில் ஒரு பழமொழி உண்டு: பேக்காரி சே பேகாரி அச்சி ஹை. பேக்காரி என்றால், “வேலையின்றி இருத்தல்” என்றும், பேகாரி என்றால், “ஊதியமின்றி வேலை செய்தல்” என்றும் பொருள். அதாவது, வேலையின்றி இருப்பதைவிட ஊதியமின்றி வேலை செய்தல் நன்று. இந்தியாவிலுள்ள பல கிராமவாசிகள் கடைக்காரரிடமோ ஜமீன்தாரிடமோ சென்று, “எனக்கு ஒரு வேலை கொடுங்கள். எனக்கு ஊதியம் தேவையில்லை, நீங்கள் விரும்பினால் உண்பதற்கு ஏதேனும் கொடுக்கலாம், இல்லாவிட்டால் அதைக்கூட நான் கேட்க மாட்டேன்,” என்று

**ஊதியமின்றி வேலை செய்வது வேலையின்றி சோம்பேறியாகத் திரிவதை விடச் சிறந்தது. வேலையின்றி இருப்பது மிகவும் ஆபத்தான நிலை.**

வேண்டுவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். ஒருவரிடம் நீங்கள் வேலை செய்தால், அவர் உங்களுக்குச் சாப்பிட ஏதாவது தரமாட்டாரா என்ன? வேலை மட்டுமின்றி உணவும் இருப்பிடமும் உடனடியாகக் கிடைத்துவிடும். வேலையை அவர் நன்றாகச் செய்வதை அந்தக் கனவான் பார்த்தால், “சரி, ஊதியமும் பெற்றுக்கொள்” என்று கூறுவார்.

ஆகவே, ஊதியமின்றி வேலை செய்வது வேலையின்றி சோம்பேறியாகத் திரிவதை விடச் சிறந்தது. வேலையின்றி இருப்பது மிகவும் ஆபத்தான நிலை. ஆனால் இந்த நவீன கலாச்சாரத்தில் ஏராளமான இயந்திரங்கள் உள்ளதால் வேலையில்லாத மனிதர்கள் நிறைய பேர் உள்ளனர். அவர்கள் சோம்பேறிகளாகவும் உள்ளனர், இது நல்லதல்ல.

**சீடர்:** உங்களுடைய கருத்துக்கள் ஆதி கால எண்ணங்கள் என்று பலர் கூறக்கூடும். தொழில்நுட்பம் வேலையின்மையை அதிகரித்தாலும், மக்கள் அதையே விரும்புவார்கள். ஏனெனில், அவர்கள் தொழில்நுட்பத்தை கடின உழைப்பிலிருந்து விடுபடுவதற்கான வழியாகவும், தொலைக்காட்சி, திரைப்படம், வாகனங்கள் போன்றவற்றை அனுபவிப்பதற்கான சுதந்திர வழியாகவும் நினைக்கின்றனர்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** தொழில்நுட்பம் சுதந்திரத்தைக் கொடுக்காது. மாறாக அது நம்மை நரகத்திற்கு இட்டுச் செல்வதற்கான சுதந்திர வழியாகும். அது சுதந்திரமல்ல. ஒவ்வொருவரும் தனது திறமைக்கேற்ற வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் அறிவுக்கூர்மையுடையவராக இருந்தால், வேத இலக்கியங்களைப் பயிலுதல், புத்தகங்கள் எழுதுதல், மற்றவர்களுக்கு அறிவைப் போதித்தல் போன்ற பிராமணப் பணிகளைச் செய்யலாம். அதுவே பிராமணர்களின் தொழில். நீங்கள் வாழ்வாதாரத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. சமுதாயம் அதை வழங்கும். வேத கலாச்சாரத்தில் பிராமணர்கள் ஊதியத்திற்காக வேலை செய்ததில்லை. வேத நூல்களைப் படிப்பதிலும் மற்றவர்களுக்கு அதனைப் போதிப்பதிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர், அவர்களுக்குத் தேவையான உணவை சமுதாயம் வழங்கியது.

சத்திரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் சமுதாயத்திலுள்ள மற்ற மனிதர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டும். மக்களுக்கு ஆபத்து ஏற்படும்போது, சத்திரியர்கள் அவர்களைக் காக்க வேண்டும். இந்தத் தொழிலுக்காக அவர்கள் வரிவசூலித்துக் கொள்ளலாம்.

சத்திரியர்களைவிட அறிவில் குறைந்தவர்களான வைசியர்கள், அல்லது வணிகச் சமுதாயத்தினர், உணவு உற்பத்தியிலும் பசுக்களைப் பாதுகாப்பதிலும் ஈடுபடுவார்கள். இந்த மூன்று உயர் வகுப்பினருக்கும் உதவிசெய்வோர் சூத்திரர்கள் எனப்படுகின்றனர்.

இவை இயல்பான சமுதாயப் பிரிவுகளாகும். இந்த அமைப்பு மிகச் சிறந்தது, ஏனென்றால் இது கிருஷ்ணரால் தோற்றுவிக்கப்பட்டது, *சாதுர்-வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்.* இதில் அனைவருக்கும் வேலை கிடைக்கின்றது.

அறிவுக்கூர்மை உடையோருக்கு வேலை கிடைக்கின்றது, படை வீரர்களுக்கு வேலை கிடைக்கின்றது, வணிகர்களுக்கு வேலை கிடைக்கின்றது, எஞ்சிய சூத்திரர்களுக்கும்கூட வேலை கிடைக்கின்றது. அரசியல் கட்சிகளை உருவாக்கி சண்டையிட வேண்டிய அவசியம் அப்போது இல்லை. வேத காலத்தில் கட்சிகள் கிடையாது. ஒவ்வொருவரும் அவரவருக்குரிய வேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்காணிக்க அரசர் இருந்தார். எனவே, பொய்யான அரசியல் கட்சிகளை அமைப்பதற்கும், போராட்டம் நடத்தி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதற்கும் அப்போது நேரம் இருந்ததில்லை, அதற்கான வாய்ப்பும் இருந்ததில்லை.

ஆனால் இவை எல்லாவற்றிற்கும் ஆரம்பம், "நான் இந்த உடலல்ல" என்பதைப் புரிந்துகொள்வதே. இது பகவான் கிருஷ்ணரால் பகவத் கீதையில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(தமிழாக்கம்: இராம கிங்கர தாஸ்)

# கிருஷ்ணர்...

**வழங்கியவர்: ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி மஹாராஜ பிரபுபாதர்**

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திவ்யமான குணங்களை ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர், ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது காண்டத்திலிருந்து ஒரு நீண்ட கட்டுரையாக 1932இல் தொகுத்தார். அதனை பகவத் தரிசனத்தின் வாசகர்களுக்காக நான்கு பாகங்களாக வெளியிடுகிறோம்.

## பாகம் இரண்டு

கிருஷ்ணர் இந்த உலகம் தோன்றுவதற்கு மூல காரணமாக இருப்பவர் (10.14.23).

கிருஷ்ணர் இவ்வுலகத்திற்கான காரணம் (10.40.1).

கிருஷ்ணர் உலகத்தைப் படைத்தவர் (10.70.38).

கிருஷ்ணர் உலகின் நன்மைக்காக, பௌதிகப் பொருள் களாலான உடலுடன் இருப்பது போன்று தோன்றுகின்றார் (10.14.55).



கிருஷ்ணர் உலகத்தின் குருவாக இருப்பவர் (10.80.44).

கிருஷ்ணர் பிறப்பு இறப்பினால் அஞ்சும் ஜீவன்களுக்கு அடைக்கலம் (10.49.23).

கிருஷ்ணர் பிறப்பிற்கு அப்பாற்பட்டவர் (10.46.38).

கிருஷ்ணர் ஜீவன்களின் அந்தரங்க வழி காட்டியாகவும் காரணமாகவும் இயக் குநராகவும் இருக்கிறார் (10.87.30).

கிருஷ்ணர் தன் மீது தியானம் செய்பவர் களின் துன்பத்தை அழிப்பவர் (10.58.10).

கிருஷ்ணர் சுயமாகத் தோன்றுபவர் (10.66.38).

கிருஷ்ணர் பரிசு கொடுக்கத் தகுந்தவர் (10.74.24).

கிருஷ்ணர் துஷ்டர்களைத் தண்டிப்பவர் (10.69.17).

கிருஷ்ணர் தேவர்களின் தேவராக இருப்பவர் (10.80.44).

கிருஷ்ணர் தேவர்களால் அரிதாகப் புரிந்துகொள்ளப்படுபவர் (10.48.27).

கிருஷ்ணர் உடல், வீடு போன்றவற்றைப் பொருட்படுத்தாதவர் (10.60.20).

கிருஷ்ணர் தலைசிறந்த தேவர்களின் உன்னத ஆளுநர் (10.73.8).

கிருஷ்ணர் தர்மத்தை நிலைநாட்டுபவர் (10.69.40).

கிருஷ்ணர் நந்த மகாராஜரின் நித்திய மகன் (10.14.1).

கிருஷ்ணர் மனிதர்களுக்கு அரிதாகவே காட்சி கொடுப்பவர் (10.71.23).

கிருஷ்ணர் உலக மனிதனைப் போன்று நடிப்பவர் (10.70.40).

கிருஷ்ணர் மனிதரின் கண்களுக்கு விருந்து படைப்பவர் (10.71.33).

கிருஷ்ணர் அனைவருக்கும் அந்தரங்க வழிகாட்டியாக இருப்பவர் (10.31.4).

கிருஷ்ணர் எல்லா உலகத்திலும் வழிபடக் கூடிய மதிப்பைப் பெற்றவர் (10.69.15)

கிருஷ்ணர் அனைத்து உலகத்தையும் உள்ளடக்கியவர் (10.59.30)

கிருஷ்ணர் எல்லா வெளிச்சத்தையும் வெளிபடுத்தக்கூடியவர் (10.63.34)

கிருஷ்ணர் தன்னை ஞாபகத்தில் வைத்திருப்பவர்களுக்கு தன்னையே ஒப்படைக்கும் பரந்த மனப்பான்மை கொண்டவர் (10.80.11)

கிருஷ்ணர் அனைத்தின் மூல காரணமாக திகழ்பவர் (10.87.50)

கிருஷ்ணர் தன்னிடம் ஜட குணங்கள் இல்லாதபோதும் தன்னுடைய அசிந்திய சக்தியின் மூலமாக பிரபஞ்சப் படைப்பிற்காக ஜட குணங்களுடன் தொடர்பு கொள்பவர் (10.46.40)

(தமிழாக்கம்: ஜீவன கௌரஹரி தாஸ்)

# நான் யார்?

**பக்திப் பாதையில் முன்னேற்றமடைய விரும்புவோர், ‘‘கடவுள் யார்?’’ ‘‘நான் யார்?’’ ‘‘எனக்கும் அவருக்குமுள்ள தொடர்பு என்ன?’’ போன்றவற்றைத் தெரிந்துகொள்வது அவசியம். சென்ற இதழில் ‘‘கடவுள் யார்?’’ என்ற கேள்விக்கு ‘‘பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே முழுமுதற் கடவுள்’’ என்பதை சாஸ்திரப்பூர்வமாகப் பார்த்தோம். இப்பொழுது ‘‘நான் யார்’’ என்ற கேள்விக்கு விடை காண்போம்.**

வழங்கியவர்: ஜெய கோபிநாத தாஸ்

சிலர் இக்கேள்வியினை மிகப்பெரிய புதிராகவும், சிலர் இதனை அசட்டுத் தனமான கேள்வியாகவும் நினைப்பர். ‘‘தினந்தோறும் நான் என்னைக் கண்ணாடியில் பார்க்கின்றேன். நான் யார் என்ற கேள்விக்கு என்ன தேவை?’’ என்றும் நினைப்பர். உண்மையில், ‘‘நீ யார்?’’ என்ற கேள்வியைக் கேட்டால், பலரிடமிருந்து நமக்கு பலவிதமான பதில்கள் வரும். சிலர் தனது பெயரைச் சொல்வர், சிலர் தனது பட்டத்தைச் சொல்வர், சிலர் தனது தொழிலைச் சொல்வர், வேறு சிலர் தனது நாட்டைச் சொல்வர். அதாவது, ‘‘என் பெயர் ராம்’’ என்று பெயரையோ, ‘‘நான் ஒரு டாக்டர்’’ என்று தொழிலையோ, ‘‘நான் ஒரு பட்டதாரி’’ என்று படிப்பையோ, ‘‘நான் ஓர் இந்தியன்’’ என்று நாட்டையோ குறிப்பிடுவர். நாம் இந்த பெயரா, படிப்பா, தொழிலா, நாடா—இல்லை, வேறு ஏதாவ தொன்றா என்பதைப் பார்க்க வேண்டும்.

## அடிப்படை ஞானம்

‘‘நான் யார்?’’ என்ற கேள்விக்கான பதிலைத்தான் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தான் அருளிய பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு முதன்முதலில் உபதேசித்தார். ஏனென்றால், ஆன்மீக வாழ்வின் அடிப்படை ஞானம் இதுவே. ‘‘நாம் இந்த உடலல்ல, ஆத்மா’’ என்பதை ஒவ்வொருவரும் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ‘‘நான் இந்த உடலல்ல,’’ என்பதும், ‘‘ஆத்மா’’ என்பதும் பலருக்கு அதிர்ச்சி தரக்கூடியதாகவும் நம்ப முடியாததாகவும் இருக்கலாம். இதை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதைக் காண்போம்.

## பொது அறிவு

யாரேனும் ஒருவர் இறந்துவிட்டால், ‘‘அவர் போய்விட்டார்’’ என்று உற்றார் உறவினர்கள் அழுவதை நாம் பார்த்திருப்போம். ஆனால், ‘‘போய்விட்டது யார்?’’ உடல் அங்கேயே இருக்கும்பொழுது, ‘‘அவர் போய்விட்டார்’’ என்று ஏன் அழ வேண்டும்? இதிலிருந்து நாம் அறிவது யாதெனில், ‘‘போனது உடல் அல்ல, வேறு ஏதோ ஒன்று உடலை விட்டுச் சென்றுவிட்டது.’’ அதைத்தான் சாஸ்திரங்கள் ‘‘ஆத்மா’’ என்கின்றன.

## உள்ளுணர்வு

நமக்குத் தலைவலி வந்தால், ‘‘என் தலை வலிக்கிறது’’ என்று சொல்வோம். ஒருபொழுதும் ‘‘நான் வலிக்கின்றேன்’’ என்று சொல்வதில்லை. ‘‘இஃது என் பேனா’’ என்று நான் சொன்னால், அதன் பொருள், ‘‘நான் இந்த பேனாவின் உரிமையாளன்’’ என்பதே. அதாவது,



யாரேனும் ஒருவர் இறந்துவிட்டால், ‘‘அவர் போய்விட்டார்’’ என்று உற்றார் உறவினர்கள் அழுவதை நாம் பார்த்திருப்போம். ஆனால், ‘‘போய்விட்டது யார்?’’

நான் வேறு, இந்த பேனா வேறு என்று அர்த்தம். அதுபோலவே “என் தலை வலிக்கிறது” என்று சொன்னால், நான் வேறு, தலை வேறு என்றும், என் தலையில் பிரச்சனை என்றும் பொருள். நம் பேச்சு வழக்கிலும்கூட, நான் வேறு, என் உடல் வேறு என்னும் உணர்வைப் பார்க்கலாம். அதாவது, “நான் ஓர் ஆத்மா” என்பதையும், “நான் இந்த தற்காலிக உடலின் உரிமையாளன்” என்பதையும் உணர முடியும்.

## உடலும் காரும்

நமது உடலை ஒரு காருக்கு ஒப்பிடலாம். காரில் வெளிச்சத்திற்கு ஹெட்லைட் இருக்கிறது, நமக்கோ கண்கள் இருக்கின்றன. நமக்கு இரண்டு கைகளும் இரண்டு கால்களும் உள்ளன, காருக்கு நான்கு சக்கரங்கள் உள்ளன. இருந்தும், ஓர் ஓட்டுநர் அதனுள் அமர்ந்து அதை இயக்கவில்லையென்றால், கார் ஓர் அங்குலம்கூட நகராது. அதுபோலவே, நம் உடலுக்கு கண், காது, கைகள், கால்கள் என அனைத்து உறுப்புகள் இருந்தாலும், ஆத்மா இல்லை என்றால், நம் உடல் ஓர் அங்குலம்கூட நகராது என்பதால், ஆத்மாவே உடலின் இயக்குநர் என்பதை அறிய வேண்டும்.

## ஆத்மா இருப்பதின் அடையாளம்

ஆத்மா, உடல் முழுவதும் உணர்வினால் பரவி இருக்கின்றது. உணர்ச்சியே ஆத்மா இருப்பதன் அடையாளமாகும். ஆத்மா உடலை விட்டுப் பிரிவதே மரணம் என்று அழைக்கப்படுகிறது. அவ்வாறு ஆத்மா பிரிந்துவிட்டால், அந்த உடலுக்கு நெருப்பு வைத்தாலும் அதில் எந்த உணர்ச்சியும் இருக்காது. ஆனால் உடலினுள் ஆத்மா இருக்கும்போது, உடல் முழுவதும் உணர்ச்சி பரவியிருப்பதன் காரணத்தால், நம் உடலில் எந்தவொரு பாகத்தில் சிறிய ஊசியை வைத்துக் குத்தினாலும் நமக்கு வலி இருக்கும். இவ்வாறு உடலில் இருக்கும் உணர்ச்சியை வைத்து ஆத்மா இருப்பதை உணரலாம்.

## விஞ்ஞான விளக்கம்

நவீன யுகத்தில், விஞ்ஞானப் பூர்வமாக நிரூபித்தால் மட்டுமே பொது மக்கள் எதையும் ஏற்றுக்கொள்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக சாஸ்திரங்களைவிட மக்களுக்கு விஞ்ஞானத்தில் அதிக நம்பிக்கை உள்ளது. சாஸ்திரங்கள் எந்த வித மாற்றமும் இல்லாமல் பன்னெடுங் காலமாக இருந்து வந்துள்ளன, மாறாக விஞ்ஞானிகளோ தங்களது கருத்தை மாற்றிக் கொண்டே இருக்கின்றனர். இருப்பினும், மக்கள் விஞ்ஞானத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்பதால், ஆத்மாவின் இருப்பை விஞ்ஞானப்பூர்வமாகவும் இங்கு விளக்குகிறோம்.

## இறக்கும் தருவாயில் ஏற்படும் அனுபவம்

ஓர் இதய அறுவை சிகிச்சையின் போது நோயாளியின் இதயத் துடிப்பு, மூளையின் அலைவரிசை என அனைத்தும் நின்றுவிட்டது. மருத்துவ ரீதியாக அந்த நோயாளி இறந்துவிட்டதாக மருத்துவர்கள் முடிவு செய்தனர். பின்பு அரைமணி நேரம் கழித்து அந்த நோயாளி மீண்டும் உயிர் பெற்று வந்தார், அறுவை சிகிச்சையும் வெற்றிகரமாக முடிந்தது. பின்னர், அந்த மருத்துவர் நோயாளியைப் பார்க்க வந்தபோது, அவரை அந்த நோயாளி மிகவும் மோசமாகத் திட்டினார்: “நான் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தேன், கிட்டதட்ட இறந்துவிட்டேன். ஆனால் நீங்களோ கோல்ப் விளையாட்டைப் பற்றி பேசிக் கொண்டிருந்தீர்கள். என்ன மருத்துவர் நீங்கள்?” இதைக் கேட்ட மருத்துவருக்கு அதிர்ச்சி. “அதெப்படி உனக்குத் தெரியும்” என்று வினவ, அந்த நோயாளி தனது அனுபவத்தை விளக்கினார்.

“நான் எனது உடலைவிட சற்று உயரத்தில் மிதந்தேன், என் உடலை நானே பார்த்தேன்.” மேலும், நோயாளிகளை கவனிக்கும் பெண்கள் எப்படி முயற்சித்தார்கள் என்பதையும் விவரமாக விளக்கினார். மருத்துவ ரீதியாக இறந்துவிட்ட ஒருவர் எவ்வாறு இத்தகவல்களைத் தெரிந்து கொண்டார் என்பது மருத்துவருக்குப் புரியாத புதிராகவே இருந்தது. ஆத்மாவைப் பற்றி அறியாத நபர்களால் இதைப் புரிந்துகொள்வது கடினமே. இருப்பினும் உடலுக்கு அப்பாற்பட்ட வாழ்க்கை இருப்பதை மருத்துவர்கள் ஊர்ஜிதப்படுத்தினார்கள்.



இதய அறுவை சிகிச்சையின்போது, உடலை விட்டு வெளியேறி பின்னர் உடலினுள் நுழைந்ததாகக் கூறப்படும் நிகழ்ச்சிகள் பல.

## முற்பிறவி ஞாபகம்

முற்பிறவி ஞாபகம் குறித்து பலர் ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளனர். அவர்களில் பிரபலமானவர், இயன் ஸ்டீவன்சன். இவர் விர்ஜினியா பல்கலைக்கழகத்தில் மனோவியல் பேராசிரியராகப் பணிபுரிந்தார். இவர் 2000க்கும் மேற்பட்ட நிகழ்வுகளை ஆராய்ச்சி செய்திருக்கிறார். பெரும்பாலான நிகழ்வுகளில் குழந்தைகள் தங்களது முற்பிறவியை ஞாபகப்படுத்தி வெளிப்படுத்தியுள்ளனர். அவர் ஒவ்வொரு நிகழ்வுகளையும் குறைந்தது 80 சாட்சியங்கள் சரியாக இருந்தால் மட்டுமே பதிவு செய்தார். யாருக்கும் தெரியாத பல அந்தரங்கமான தகவல்கள் அவருடைய பதிவில் இருக்கின்றன. உதாரணமாக,



தங்களது முற்பிறவியை நினைவுகூர்ந்து நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தோர் பலர்.

ஒருவர் தான் இறந்த சில மாதங்கள் கழித்து, வேறொரு இடத்தில் பிறந்தார். பின்னர், தன்னுடைய முற்பிறவியில் வசித்த கிராமத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் தெரிவித்தார். தனது முற்பிறவியின் மொழியை தனது இப்பிறவியின் தாய்மொழியைக் காட்டிலும் மிகவும் சரளமாகப் பேசினார். இக்குழந்தை அந்த ஊரில் இறந்துபோன அதே நபர்தான் என்பதை விஞ்ஞானிகள் முடிவு செய்தனர்.

எப்படி இருந்தாலும், ஆத்மாவின் குணத்தை அறிவது விஞ்ஞானிகளுக்கு மிகவும் கடினமான ஒன்றே. ஆத்மாவைப் பற்றி நமது சாஸ்திரங்கள் மிகத் தெளிவான விளக்கங்களைத்தருகின்றன. எல்லா ஆராய்ச்சிகளும் ஏற்கனவே செய்தாயிற்று, புதிதாக செய்வதற்கு ஏதுமில்லை. சாஸ்திரங்களின் மீதான நம்பிக்கையைப் பொறுத்தே இஃது அமைகிறது. துரதிர்ஷ்டவசமாக விஞ்ஞானப்பூர்வமாக விளக்கவில்லை என்றால் மக்கள் அதனை கற்பனை கதை என்று நினைக்கிறார்கள்.

## ஆத்மாவின் தன்மைகள்

ஆத்மா நித்தியமானது. கிருஷ்ணர் ஆத்ம விஞ்ஞானத்தை உபதேசித்த பொழுது முதலில் கூறியது இதுதான். "நானோ, நீயோ, இம்மன்னர்களோ இல்லாமலிருந்த காலம் எதுவுமில்லை. எதிர்காலத்திலும் நம்மில் எவரும் இல்லாமலிருக்கப் போவதுமில்லை." (பகவத் கீதை 2.12) ஆத்மா நித்திய மானது, இந்த ஜடவுடலின் அழிவால் அஃது அழிவடையாதது என்று கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு உபதேசித் தார். இந்த உடல் அழிந்தாலும் அதற்கு அப்பாற்பட்டு ஆத்மா நித்தியமாக வாழும் என்பதையும், அந்த ஆத்மாவே நாம் என்பதையும் விளக்குகிறார். ந ஹன்யதே ஹன்யமானே ஷரீரே. (பகவத் கீதை 2.20)

## ஆத்மா ஞானமயமானது

நித்தியமான ஆத்மா அநித்தியமான உடலோடு அடையாளம் கொள்ளும் போது, எல்லாப் பிரச்சனைகளும் ஆரம்பமாகின்றன. ஆத்மா எல்லா ஞானமும் உடையது, கல்வியின் நோக்கம் ஆத்மாவிடம் ஏற்கனவே இருக்கும் ஞானத்தை வெளிக்கொணர் வதாக இருக்க வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக தற்போதைய கல்விமுறை ஆத்ம ஞானத்தை மூடி மறைக்கும்பொருட்டே அமைந்திருக்கிறது. நமது பாடத்திட்டத்தில் ஆத்மாவில் உறைந்திருக்கும் ஞானத்தை வெளிக் கொண்டு வருவதற்கான எந்தவொரு திட்டமும் இல்லை.

## ஆத்மா ஆனந்தமானது

ஆத்மாவின் இயற்கை ஆனந்தமய மானது என்ற காரணத்தினால்தான் ஆத்மாக்களாகிய நாம் அனைவரும் ஆனந்தமாக இருக்க விரும்புகிறோம். இஃது ஆத்மாவின் இயற்கையான தன்மை. நாம் இந்த உடல் என்று நம்மை அடையாளம் கண்டு கொள்ளும்போது புலனின்பத்தை நாடுகின்றோம். ஆனால், ஆத்மா திருப்தியடையும்போதே உண்மையான ஆனந்தம் கிடைக்கும்.

## ஆத்மா எங்கே இருக்கிறது?

ஆத்மா இதயத்தில் அமைந்துள்ளது என்று முண்டக உபநிஷத் கூறுகின்றது. பகவத் கீதை மற்றும் உபநிஷத்துக்களில் ஆத்மாவைப் பற்றி மேலும் விளக்கப் பட்டுள்ளது. தெளிந்த புத்தியினால் மட்டுமே ஆத்மாவை அறிந்து கொள்ள முடியும், மழுங்கிய புத்தியினால் அல்ல.

## நுண்நோக்கி மூலமாக ஆத்மாவைப் பார்க்க இயலுமா?


ஆத்மா மிகவும் சிறியது. ஆத்மாவின் அளவு பற்றி ஸ்வேதாஷ்வதர உபநிஷத்தில் (5.9) கூறப்பட்டிருக்கின்றது. தலைமுடியின் நுனியை பத்தாயிரம் பங்காக வெட்டினால் எவ்வளவு சிறியதாக இருக்குமோ, அதுவே ஆத்மாவின் அளவு. ஆத்மாவைப் பார்ப்பதற்கு நுண்நோக்கியை உபயோகப்படுத் தலாமே என்று சில விஞ்ஞானிகள் பரிந்துரைக்கலாம். ஆனால் ஆத்மாவின் அளவு இவ்வளவு என்றாலும், ஆத்மாவானது பௌதிக வஸ்து அல்ல என்பதால், பௌதிக கருவியினாலும் புலன்களாலும் அதனைப் பார்ப்பது இயலாது.

## ஆத்மா உடல் மாறக்கூடியதா?

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில் (2.13), ஒரு ஜீவன், ஓர் உடலினுள் இருக்கும்போது, குழந்தைப் பருவத்திலிருந்து இளமைக்கும் இளமை யிலிருந்து முதுமைக்கும் மாறுவதுபோல, மரணத்தின் போது வேறு உடலுக்குச் செல்கிறான் என்று கூறுகிறார். இதை நாம் நமது நடைமுறை அனுபவத்திலும் உணர முடியும். நமது உடல் பல்வேறு மாறறங்களைக் கடந்து வந்துள்ளது. ஆனால் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் "நான்" என்னும் உணர்வு மாறுவதில்லை. அதுபோலவே, மரணம் என்னும் மாற்றத்தை இந்த உடல் சந்திக்கும்போது, நாம் நமது தற்போ தைய உடலை விட்டு மற்றோர் உடலை அடைவோம்.

அடுத்த இதழில்,
"ஆத்மாவும் கடவுளும் ஒன்றா?"

ஜெய கோபிநாத தாஸ் B.E. அவர்கள் இஸ்கான் சென்னையின் பெரம்பூர் கிளையில் பிரம்மசாரியாகத் தொண்டாற்றி வருகின்றார்.




# பகவத் கீதை உண்மையுருவில் —ஒரு கண்ணோட்டம்

**அத்தியாயம் ஒன்பது**




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் எட்டு அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **ஒன்பதாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

## மிக இரகசியமான அறிவு

### எட்டாம் அத்தியாயத்தின் சுருக்கம்

ஏழாம் அத்தியாயத்தின் இறுதியில் கிருஷ்ணர் உபயோகித்த சில வார்த்தைகளுக்கு, எட்டாம் அத்தியாயத்தின் தொடக்கத்தில் அர்ஜுனன் விளக்கம் கேட்டதால், கிருஷ்ணர் அவற்றை விளக்கினார். ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனின் பொதுவான கேள்விகளுக்கு சுருக்கமான பதிலை வழங்கி விட்டு, மரண நேரம் குறித்த கேள்வியை மட்டும் விளக்கமாக எடுத்துரைத்தார். மரண நேரத்தில் கிருஷ்ணரை நினைப்பவன், நிச்சயமாக கிருஷ்ணரை அடைய முடியும். உண்மையில், மரண நேரத்தில் ஒருவன் எந்த நிலையை நினைத்தாலும், நிச்சயம் அதனை அடைவான். எனவே, ஒருவன் தனது வாழ்நாள் முழுவதும் கிருஷ்ணரை நினைக்கப் பழக வேண்டும், அவ்வாறு பழகுபவனால் மரண நேரத்தில் கிருஷ்ணரை எளிதில் நினைக்க முடியும். கிருஷ்ணரை யோகப் பயிற்சியின் மூலம் நினைக்க விரும்புபவர்கள், அவரை எல்லாமறிந்தவர், கட்டுப்படுத்துபவர் என்று நினைப்பர். தூய பக்தர்களோ பிறழாத மனதுடன் எப்போதும் கிருஷ்ணரின் நேரடியான அன்புத் தொண்டில் ஈடுபட்டு, அவரை ஒருபோதும் மறக்க முடியாத நிலையில் உள்ளனர். அத்தகு மகாத்மாக்கள் தங்களது மரணத்திற்குப் பிறகு, துன்பம் நிறைந்த இவ்வுலகிற்கு வருவதேயில்லை, அவர்கள் கிருஷ்ணரின் நித்திய உலகை அடைகிறார்கள். கிருஷ்ணரின் நித்திய உலகம், தோன்றி மறையும் இந்த ஜடவுலகத்திற்கு அப்பாற்பட்டதாகும். பிரம்மாவின் படைப்பிற்கு அப்பாற்பட்ட அவ்வுலகங்கள் வைகுண்ட லோகங்கள் என்று அழைக்கப்படுகின்றன, அவற்றில் உயர்ந்த லோகமான கோலோக விருந்தாவனத்தில் கிருஷ்ணர் தனது நித்திய லீலைகளில் ஈடுபட்டு வருகின்றார். யோகிகள் இவ்வுலகை விட்டுச் செல்வதற்கென்று பல்வேறு கால நியமங்கள் உள்ளன, ஆனால் அத்தகு நியமங்கள் ஏதுமின்றி, கிருஷ்ணரின் தூய பக்தியில் இவ்வுலகை விட்டு விலகுபவர்கள் நிச்சயமாக கிருஷ்ண லோகத்தை அடைகின்றனர்.

### எட்டாம் அத்தியாயத்திற்கும் ஒன்பதாம் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

தூய்மையான (அனன்ய) பக்தியில் நிலைபெற்றுள்ள பக்தனைப் பற்றி எட்டாம் அத்தியாயத்தில் பேசிய கிருஷ்ணர், எவ்வாறு அனன்ய பக்தியின் தளத்திற்கு ஒருவரால் வர முடியும் என்பதை ஒன்பதாம் அத்தியாயத்தில் எடுத்துரைக்கின்றார்.

## ஒன்பதாம் அத்தியாயத்தின் பெருமைகள்

கீதையிலேயே மிகவும் முக்கியமான அத்தியாயம் "மிக இரகசியமான அறிவு" அல்லது *ராஜ வித்யா* என்றழைக்கப்படும் ஒன்பதாவது அத்தியாயமே. இந்த அத்தியாயத்தின் சிறப்பினை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்வயம் தாமாகவே முன்வந்து முதல் மூன்று ஸ்லோகங்களில் எடுத்துரைக்கின்றார்.

கிருஷ்ணரைப் பற்றிய இந்த மிக இரகசியமான அறிவு, ஜடவுலக வாழ்விலிருந்து விடுதலையளிக்கக் கூடியது. கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதால் இந்த அறிவில் ஒருவன் முன்னேற்றம் பெற முடியும். இதைப் புரிந்துகொள்ள விரும்புபவர்கள் கிருஷ்ணரின் மீது பொறாமை கொள்ளாதவர்களாக இருத்தல் அவசியம். பகவத் கீதையின் இரண்டாம் அத்தியாயத்திலும் மூன்றாம் அத்தியாயத்திலும் விவரிக்கப்பட்ட ஆன்மீக விஷயங்கள் *குஹ்யம்*, இரகசியமானவை என்று அழைக்கப்படு கின்றன. ஏழாம் அத்தியாயத்திலும் எட்டாம் அத்தியாயத்திலும் விவரிக்கப்பட்டவை *குஹ்யதரம்*, மிக இரகசியமானவை எனப்படுகின்றன. மேலும், ஒன்பதாம் அத்தியாயத்தில் உள்ள விஷயங்கள் *குஹ்யோதம*, மிக மிக இரகசியமானவை எனப்படுகின்றன. கிருஷ்ணரின் மீது பொறாமையற்று இருத்தல் என்பது இந்த அத்தியாயத்தைப் புரிந்துகொள்வதற்கான மிக முக்கியமான தகுதியாகும். கீதைக்கு உரை எழுதக்கூடிய பேராசிரியர்கள்கூட அவர்மீது பொறாமை கொண்டிருக்கும் காரணத்தினால், கீதையின் உள் இரகசியத்தினுள் அவர்களால் நுழைய முடிவதில்லை. அவர்களது உரைகள் பயனற்றவை, அவர்கள் கீதையை விளக்கவோ கிருஷ்ணரைப் பற்றிய அறிவை வழங்கவோ தகுதியற்றவர்கள். அத்தகைய முட்டாள்களின் வியாக்கி யானங்களை அறவே தவிர்த்துவிட வேண்டும்.

பக்தியை எடுத்துரைக்கும் இந்த அறிவு, அனைத்து விதமான கல்விக்கும் (அறிவிற்கும்) அரசனாக அமைகிறது, எல்லா இரகசியங்களிலும் இது மிக இரகசியமானதாகும், இதுவே மிகத் தூய்மையான அறிவாகும் (உலகின் எல்லாப் பாவங்களையும் தூய்மைப்படுத்தக்கூடியது), தன்னுணர்வின் அனுபவங்களை நேரடியாக நல்கக் கூடியது, இதுவே தர்மத்தின் பக்குவநிலை, இஃது அழிவற்றது, மற்றும் பேரின்பத்துடன் செயலாற்றப்படக் கூடியது. பக்தித் தொண்டை நிறைவேற்றுபவன் நிச்சயமாக மகிழ்ச்சியடைவான், அப்படி யிருக்கையில், ஏன் ஒரு சிலர் பக்தித் தொண்டை ஏற்றுக்கொள்வதில்லை? ஏனெனில், அவர்களிடம் பக்தித் தொண்டின் மீதான நம்பிக்கை இல்லை. அதனால் அவர்கள் இவ்வுலகின் பிறப்பு இறப்பிலேயே திரிகின்றனர்.

## கிருஷ்ணருக்கும் ஜடவுலகிற்கும் உள்ள தொடர்பு (ஐஸ்வர்ய ஞானம்)

ஓர் அரசாங்கத்தின் பல்வேறு துறைகள் அனைத்தும் மன்னரின் சக்தியே, மன்னரே அவை எல்லா வற்றையும் ஆள்கிறார், ஒவ்வொரு துறையும் மன்னரையே சார்ந்துள்ளது. தனது நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மன்னர் தனது சக்தியின் மூலம் வீற்றுள்ளார், ஆனாலும் அவர் தனிப்பட்ட முறையில் அதிலிருந்து விலகியுள்ளார். அதுபோல, ஜடவுலகிலும் ஆன்மீக உலகிலும் என்னவெல்லாம் உள்ளனவோ, அவை அனைத்தும் கிருஷ்ணரின் சக்தியே. இருப்பினும், கிருஷ்ணர் அவற்றிலிருந்து விலகியிருக் கிறார். அவர் தனது தோன்றாத உருவின் மூலமாக இந்த அகிலம் முழுவதும் பரவியுள்ளார். எல்லா ஜீவன்களும் கிருஷ்ணரில் உள்ளனர், ஆனால் அவர்களில் கிருஷ்ணர் இல்லை. கிருஷ்ணருக்கும் அவரது சக்திகளுக்கும் இடையில் ஒரே சமயத்தில் ஒற்றுமையும் வேற்றுமையும் உள்ளது; இதுவே *அசிந்த்ய பேதாபேத* தத்துவம் என்று அழைக்கப்படுகிறது.

அனைத்தையும் படைத்தவர் கிருஷ்ணரே என்றபோதிலும், படைக்கப் பட்டவை எல்லாம் அவரில் நிலை பெற்றிருக்கவில்லை. அதுவே அவரது யோக ஐஸ்வர்யம். கிருஷ்ணரே எல்லா உயிரினங்களையும் காப்பவர், அவர் எங்கும் நிறைந்துள்ளவர்; இருப்பினும், அவர் இவ்வுலகத்தின் ஒரு பகுதி அல்ல. புரிந்துகொள்ள இயலாத கிருஷ்ணரின் இத்தன்மையை நாம் உணரும் பொருட்டு ஆகாயத்தையும் காற்றையும் வைத்து கிருஷ்ணர் ஓர் உதாரணத்தைக் கொடுக்கின்றார். காற்று எவ்வாறு எங்கும் வீசிக் கொண்டு எப்போதும் ஆகாயத்தில் உள்ளதோ, அதுபோலவே படைக்கப்பட்டுள்ளவை அனைத்தும் கிருஷ்ணரில் அமைந்துள்ளன. காற்று மிகவும் பிரம்மாண்டமாக உள்ள போதிலும், அஃது ஆகாயத்தினுள் அமைந்துள்ளது, ஆகாயத்தின் எல்லை களைத் தாண்டுவதில்லை. அதுபோல, பிரபஞ்சம் முழுவதும் இறைவனின் பரம இச்சையினால் இயங்குகின்றது. அவருடைய விருப்பமின்றி ஒரு புல்லும் அசையாது, இருப்பினும் அவர் அனைத்திலிருந்தும் விலகியுள்ளார்.

கல்பத்தின் முடிவில் ஜடத் தோற்றம் முழுவதும் கிருஷ்ணரின் இயற்கையில் நுழைந்து, பின்னர் அடுத்த கல்பத்தின்

---

**இந்த அறிவு, கல்வியின் அரசனும், எல்லா இரகசியங்களிலும் மிக இரகசியமானதும், மிகத் தூய்மையானதுமாகும். தன்னுணர்வின் அனுபவத்தை நேரடியாக அளிப்பதால் இதுவே தர்மத்தின் பக்குவ நிலையாகும். இ·்து அழிவற்றதும், பேரின்பத்துடன் செயலாற்றப்படுவதும் ஆகும்.**

—பகவத் கீதை 9.2

ஆரம்பத்தில், அவரது சக்தியினால் மீண்டும் படைக்கப்படுகின்றன. முற்றிலும் அவருக்குக் கீழ்ப்பட்ட இந்த பிரபஞ்சம் அவரது விருப்பப்படியே மீண்டும் மீண்டும் படைக்கப்பட்டு அழிக்கப்படுகின்றது. நடுநிலையில் அமைந்து, பௌதிகச் செயல்களிலிருந்து முற்றிலும் விலகியிருக்கும் கிருஷ்ணரை எந்தச் செயல்களும் பந்தப்படுத்த முடியாது. கிருஷ்ணரின் சக்தியான இந்த ஜட இயற்கை, அவரது மேற்பார்வையில் செயல்பட்டு, அசைவன, அசையாதன என எல்லாவற்றையும் படைக்கின்றது.

## முட்டாள்களும் மகாத்மாக்களும்

இவ்வளவு சிறப்பு வாய்ந்த கிருஷ்ணரை சிலர் மதிக்காமல் இருப்பது ஏன்? என்ற கேள்வி இயற்கையாக எழலாம். அவர் மனிதர்களுக்கு மத்தியில் தோன்றுவதால், அவரது தெய்வீக இயற்கையை உணராத முட்டாள்கள் அவரை ஏளனம் செய்கின்றனர். கிருஷ்ணரை உள்ளபடி ஏற்றுக் கொள்ளாமல், அவரை ஒரு சக்தியுடைய மனிதனாகவோ, கர்மத்தினாலும் தவத்தினாலும் அற்புத ரூபம் பெற்றவராகவோ, அருவமான அவர் ரூபத்தைத் தாங்கி வருவதாகவோ அந்த முட்டாள்கள் கற்பனை செய்கின்றனர். மனிதரைப் போல தோன்றினாலும், அவர் சாதாரண மனிதரல்ல; அவரது திருமேனி நித்தியமானது, அறிவு நிரம்பியது, மற்றும் ஆனந்தமயமானது. அவர் இவ்வுலகில் தோன்றும்போது, தனது நித்திய உருவில் தனது அந்தரங்க சக்தியின் மூலமாகத் தோன்றுகிறார். இதைப் புரிந்துகொள்ளாத மூடர்கள், ராட்சசத்தனமான கருத்துக்களாலும் நாத்திகக் கருத்துக்களாலும் கவரப்பட்டு, தங்களது முக்திக்கான ஆசைகள், கர்மங்கள், அறிவுப் பயிற்சிகள் என அனைத்திலும் தோல்வியை சந்திக்கின்றனர்.

இத்தகு குழப்பங்களுக்கு உட்படாமல், கிருஷ்ணரை ஆதிபுருஷராகவும் அழிவற்றவராகவும் அறிந்த மகாத்மாக்கள் கிருஷ்ணருடைய தெய்வீக இயற்கையின் பாதுகாப்பில் உள்ளனர். அவர்கள் கிருஷ்ணரின் பக்தித் தொண்டில் பூரணமாக ஈடுபட்டு, எப்போதும் அவரது புகழை கீர்த்தனம் செய்து கொண்டு, திடமான உறுதியுடன் முயன்று கொண்டு, அவரை நித்தியமாக வழிபடுகின்றனர். அவ்வாறு கிருஷ்ண பக்தியில் இடைவிடாமல் ஈடுபட்டிருப்போர் மகாத்மாக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். ஒரு சாதாரண மனிதனை முத்திரை குத்துவதன் மூலம் மகாத்மாவை உற்பத்தி செய்ய முடியாது. பரம்பொருளை அருவ நிலையில் உணரக்கூடியோர் பகவத் கீதையில் மகாத்மாவாக விவரிக்கப்படவில்லை.



*கிருஷ்ணரை ஆதி புருஷராகவும் அழிவற்றவராகவும் ஏற்று, அவரது புகழைப் பாடுவதில் ஈடுபடுவோர் மகாத்மாக்கள் எனப்படுகின்றனர்.*

## விஸ்வரூபத்தை வழிபடுவோர்

மகாத்மாவின் தளத்தில் இல்லாதோர், இறைவனைப் பல்வேறு தேவர்களின் மூலமாகவும் விஸ்வரூபத்தின் மூலமாகவும் வழிபடுகின்றனர். அத்தகு வழிபாடுகள் நேரடியான வழிபாட்டைக் காட்டிலும் தாழ்ந்தவை. இந்த ஜடவுலகத்திற்கு அப்பாலுள்ள எதையும் சிந்திக்க முடியாதவர்கள், இந்த உலகமே உயர்ந்தது என்று எண்ணி, அதனை பகவானின் உருவமாக வழிபடுகின்றனர். அதன்படி, வேதச் சடங்குகள், யாகம், முன்னோருக்கு அளிக்கப்படும் பொருள், மந்திரம், நெய், அக்னி, தாய், தந்தை, காப்பவன், பாட்டனார், ஓம்காரம், ரிக், யஜுர், ஸாம வேதங்கள், இலக்கு, காப்பவன், தலைவன், சாட்சி, வசிப்பிடம், நண்பன், வெப்பத்தைக் கொடுப்பவன், மழையைக் கொடுப்பவன், மழையைத் தடுப்பவன் என பல்வேறு ரூபங்களில் கிருஷ்ணரைக் கண்டு அவர்கள் அவரை வழிபடுகின்றனர்.

## தேவர்களை வழிபடுவோர்

அடுத்த தரப்பில் இருப்பவர்கள், ஸ்வர்க லோகத்தை அடைவதற்காக பல்வேறு தேவர்களை வழிபடுகின்றனர். அத்தகு வழிபாட்டினால் பாவ விளைவுகளிலிருந்து தூய்மையடைந்து, இந்திர லோகத்தில் பிறவியெடுத்து, தேவ சுகங்களை அவர்கள் அனுபவிப்பர். ஆனால் அப்புண்ணியங்களின் பலன்கள் தீர்ந்தவுடன், அவர்கள் மீண்டும் இந்த மரண உலகத்தில் வீழ்கின்றனர். நம்பிக்கையுடன் தேவர்களை வழிபடுபவன், உண்மையில் கிருஷ்ணரையே வழிபடுகிறான், ஆனால் அது தவறான வழியில் மறைமுகமாகச் செய்யப்படும் வழிபாடாகும். மரத்தின் வேருக்குத் தண்ணீர் ஊற்றுவதற்குப் பதிலாக, இலைகளுக்கும் கிளைகளுக்கும் நீரூற்றுவதைப் போன்றது அது. அவ்வாறு தேவர்களை வழிபடுவதை கிருஷ்ணர் அனுமதிப்பதில்லை. கிருஷ்ணரின் உண்மையான தெய்வீக இயற்கையை அங்கீகரிக்காத நபர்கள் வீழ்ச்சியடைவது உறுதி. தேவர்களை வழிபடுவோர் தேவர்களிடையே

# ஒன்பதாம் அத்தியாயத்தின் ஆறு பகுதிகள்

எட்டாம் அத்தியாயத்துடனான தொடர்பு: 8.14, கிருஷ்ணருக்கு கலப்படமற்ற (அனன்ய) பக்தி செய்தல்

**(1) ஒன்பதாம் அத்தியாயத்தின் பெருமைகள் (9.1-3)**

கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதற்கான தகுதி: பொறாமையின்றி இருத்தல்

பக்தியைப் பற்றிய அறிவின் பெருமைகள்: அறிவின் அரசன், இரகசியங்களில் இரகசியமானது, பேரின்பத்துடன் செய்யப்படக்கூடியது...

நம்பிக்கையற்றோர் அவரை அடைய முடியாது

**(2) கிருஷ்ணருக்கும் ஜடவுலகிற்கும் உள்ள தொடர்பு (9.4-10)**

பகவானே அனைத்தையும் படைக்கின்றார் என்றபோதிலும் அவர் வேறுபட்டவர்.

அனைத்தும் அவராலேயே நடைபெறுகின்றது, ஆனால் அவர் அவற்றிலிருந்து விடுபட்டவர்.

பௌதிக இயற்கையை வெறுமனே நோக்குவதால் படைக்கின்றார், அதில் நேரடியாக ஈடுபடுவதில்லை.

**(3) முட்டாள்களும் மகாத்மாக்களும் (9.11-14)**

முட்டாள்கள் அவரை சாதாரண மனிதனாக நினைக்கின்றனர்

அவர்களின் கதி: முக்திக்கான நம்பிக்கை, பலன்நோக்குச் செயல்கள், அறிவுப் பயிற்சிகள் என அனைத்தும் அழிந்துவிடும்

கிருஷ்ணரை ஏற்போர் மகாத்மாக்கள்; இவர்கள் தெய்வீக இயற்கையின் பாதுகாப்பில் உள்ளனர், எப்போதும் கீர்த்தனத்தில் ஈடுபட்டவர்கள்

**(4) விஸ்வரூபத்தை வழிபடுவோர் (9.15-19)**

பௌதிகத் தோற்றத்தை வழிபடுவோர்

**(5) தேவர்களை வழிபடுவோர் (9.20-25)**

மேலுலகங்களை அடைவர், தேவ வழிபாடு கிருஷ்ணரைத் தவறான வழியில் வழிபடுவது

கிருஷ்ணரைத் தூய்மையாக வழிபடுவோரை அவரே பார்த்துக் கொள்கிறார்

**(6) தூய பக்தியின் உயர்நிலை (9.26-34)**

கிருஷ்ணரை வழிபடுதல் மிக எளிமையானது (பழம், பூ, நீர், இலை)

எதைச் செய்தாலும் கிருஷ்ணருக்கு அர்ப்பணித்தல் (நிஷ்காம கர்ம யோகம்)

கிருஷ்ணருக்கு அனைவரும் சமமே, ஆனால் பக்தனிடம் தனிக்கருணை உண்டு

பக்தன் ஏதேனும் தவறிழைத்தாலும், பக்தனாகவே கருதப்படுகிறான்

பெண்கள், வைசியர், சூத்திரர் உட்பட அனைவரும் பரம கதியை அடையலாம்

கிருஷ்ணரின் தொண்டில் ஈடுபடுவதற்கான வழிகள்: கிருஷ்ணரையே நினைத்தல், கிருஷ்ண பக்தனாகுதல், கிருஷ்ணரை வழிபடுதல், கிருஷ்ணரின் முன் விழுந்து வணங்குதல்

பிறப்பர், முன்னோர்களை வழிபடுவோர் முன்னோர்களிடையே பிறப்பர், பூதங்களை வழிபடுவோர் பூதங்களிடையே பிறப்பர், கிருஷ்ணரை வழிபடுவோரோ கிருஷ்ணருடனே வாழ்வர்.

## தூய பக்தியின் உயர்நிலை

கிருஷ்ணரை அவரது தெய்வீக ரூபத்தில், களங்கமற்ற (அனன்ய) பக்தியினால் வழிபடுவோருக்கு, வேண்டியவற்றை கொடுத்தும் இருப்பவற்றை காத்தும் கிருஷ்ணர் சுயமாக அவரே காக்கின்றார். கிருஷ்ணரைத் தவிர வேறு யாரையும் அறியாத தூய பக்தன், கிருஷ்ணரை வந்தடைவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் கிருஷ்ணரே நிறைவேற்றுவார், அவனிடம் இருக்கக் கூடிய பக்தியை அவரே பாதுகாக்கவும் செய்கிறார்.

தேவர்களை வழிபடுவோர் அதற்காக பல்வேறு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், ஆனால் கிருஷ்ணரை வழிபடுதல் மிகவும் எளிதானது. அன்புடனும் பக்தியுடனும் யாரேனும் கிருஷ்ணருக்கு இலையோ பூவோ பழமோ நீரோ அளித்தால், அதனை கிருஷ்ணர் ஏற்றுக் கொள்கிறார். பக்தி யோகத்தின் உயர் தளத்தில் நிலைபெற்று கிருஷ்ணரை வழிபட இயலாதவர்களுக்காக கிருஷ்ணர் கர்ம யோகத்தையும் பரிந்துரைக்கின்றார்: எதையெல்லாம் செய்கின்றாயோ, எதையெல்லாம் உண்கின்றாயோ, எதையெல்லாம் படைக்கின்றாயோ, எந்த தவங்களையெல்லாம் செய்கின்றாயோ, அவை அனைத்தையும் தனக்கு அர்ப்பணமாகச் செய்யும்படி கிருஷ்ணர் கட்டளையிடுகிறார்; அவ்வாறு கர்ம பந்தத்திலிருந்து விடுபட்டு, மனதை கிருஷ்ணரில் பதியச் செய்து, முக்தி பெற்று கிருஷ்ணரை அடையலாம்.

கிருஷ்ணர் யாரிடமும் பொறாமை கொள்வதோ பாரபட்சம் காட்டுவதோ இல்லை. அவர் அனைவருக்கும் சமமானவர். இருப்பினும், பக்தியுடன் அவருக்கு அன்புத் தொண்டு செய்பவர் யாராக இருந்தாலும், அவரை கிருஷ்ணர் தனது நண்பனாகக் கருதுகிறார். அனன்ய பக்தியில் ஈடுபட்டுள்ள அத்தகைய தூய பக்தன், சில சமயங்களில் ஏதேனும் ஒரு காரணத்தினால் மிகவும் மோசமான செயலைச் செய்ய நேர்ந்தாலும், கிருஷ்ணர் அவனை தனது பக்தனாகவே கருதுகிறார். ஏனெனில், கிருஷ்ணருக்கு பக்தி செய்ய வேண்டும் என்ற தனது தீர்மானத்தில் அவன் திடமாக உள்ளான். விரைவிலேயே அவன் தர்மாத்மாவாக ஆகி, அமைதியை அடைகிறான். கிருஷ்ண பக்தன் என்றும் அழிவதில்லை—இதனை அனைவருக்கும் தைரியமாக அறிவிக்கும்படி கிருஷ்ணர் அர்ஜுனனுக்குக் கட்டளையிடுகிறார். பெண்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என கீழ் குலத்தைச் சார்ந்த யாராக இருந்தாலும்,

கிருஷ்ணரிடம் சரணடைந்தால், அவர்கள் பரம கதியை அடைய முடியும்.

தாழ்ந்தவர்களும் பரம கதியை அடைய முடியும் என்னும்பட்சத்தில், பிராமணர்களையும் சத்திரியர் களையும் பக்தர்களையும் பற்றிக் கூற வேண்டுமா என்ன! துன்பம் நிறைந்த இந்த தற்காலிக உலகத்திலுள்ளோர் அனைவரும் கிருஷ்ண பக்தியில் ஈடுபட்டு உயர் நிலையை அடைய வேண்டும். அந்த உயர் நிலையை அடைவதற்கு, ஒவ்வொருவரும் தங்களது மனதை எப்போதும் கிருஷ்ணரைப் பற்றிச் சிந்திப்பதில் ஈடுபடுத்த வேண்டும், கிருஷ்ணரை வழிபட வேண்டும், கிருஷ்ணரின் பக்தனாக ஆக வேண்டும், கிருஷ்ணரின் முன்பு விழுந்து வணங்க வேண்டும். இவ்வாறு கிருஷ்ணரில் முழுமையாக லயித்து நிற்போர் நிச்சயம் கிருஷ்ணரை அடைவர்.

## ஒன்பதாம் அத்தியாயத்திற்கும் ஏழாம் அத்தியாயத்திற்கும் இடையிலான நெருக்கம்

ஒன்பதாம் அத்தியாயமும் ஏழாம் அத்தியாயமும் பல்வேறு கருத்துகளைப் பகிர்ந்து கொள்கின்றன. அவற்றின் பட்டியல்...

| | | |
|---|---|---|
| கிருஷ்ணரிடமிருந்து கேட்டல் | 7.1–2 | 9.1–2 |
| கிருஷ்ணருக்கும் பௌதிக உலகத்திற்கும் இடையிலான தொடர்பு | 7.4–7, 7.12 | 9.4–10 |
| பௌதிக உலகில் கிருஷ்ண சக்தியின் தோற்றம் | 7.8–11 | 9.16–19 |
| தேவர்களை வழிபடுவதும் கிருஷ்ணரை வழிபடுவதும் | 7.20–23 | 9.20–28 |
| அருவவாதமும் கிருஷ்ண பக்தியும் | 7.24–26 | 9.11–15 |



ஹரே கிருஷ்ண
ஹரே கிருஷ்ண
கிருஷ்ண
கிருஷ்ண
ஹரே ஹரே
ஹரே ராம
ஹரே ராம
ராம ராம
ஹரே ஹரே

# ஸ்ரீமத் பாகவதம் முழுப் பதிப்பு

## —தற்போது தெலுங்கிலும்—

வேத ஞானத்தின் கனிந்த பழமான ஸ்ரீமத் பாகவதம் கலி யுகத்தின் இருண்ட மக்களுக்கு ஒளியைக் கொடுக்கும் தன்னிகரற்ற ஆன்மீக பொக்கிஷமாகும். ஸ்ரீமத் பாகவதத்தினை தனது உயிரினும் மேலாக மதிக்கக்கூடிய கௌடீய வைஷ்ணவப் பரம்பரையில் வந்த தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் (அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்) பாகவதத்தின் 12 காண்டங்களையும் ஆங்கிலம் பேசும் மக்களுக்கு உதவும் வகையில் விரிவான பொருளுரைகளுடன் வெளியிட்டார். உலகளாவிய தனது பரந்த பயணங்களுக்கு மத்தியிலும், ஸ்ரீல பிரபுபாதர் இரவு நேரங்களில் ஸ்ரீமத் பாகவதத்திற்கு விளக்கம் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீல பிரபுபாதரின் கடின உழைப்பினால் உருவான ஸ்ரீமத் பாகவதத்தின் இறுதிப் பகுதிகள் அவரது சீடர்களால் விளக்கமளிக்கப்பட்டவை. ஸ்ரீமத் பாகவதத்தின் பன்னிரண்டு காண்டங்கள் பதினெட்டு புத்தகங்களின் வடிவில் பக்தர்களுக்கு தற்போது விருந்து படைத்து வருகின்றன.

ஸ்ரீமத் பாகவதம் உலகின் எல்லா மொழிகளிலும் வர வேண்டும் என்பது ஸ்ரீல பிரபுபாதரின் விருப்பம். அதன்படி, நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ஸ்ரீமத் பாகவதத்தின் தெலுங்கு பதிப்பானது சமீபத்தில் திருப்பதியில் நடந்த பிரம்மாண்டமான விழாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. தெலுங்கு பேசும் பக்தர்கள் இதுவரை எட்டாம் காண்டம் வரை மட்டுமே சுவைக்க முடிந்தது. தற்போது அவர்களால் முழு ஸ்ரீமத் பாகவதத்தையும் சுவைக்க இயலும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தைச் சார்ந்த திரு. சுப்ரமணியம் ஐ.ஏ.எஸ், ஸ்ரீல பிரபுபாதரின் சீடரும் பக்திவேதாந்த





புத்தக அறக்கட்டளையின் அறங்காவலர்களில் ஒருவருமான திரு. பீம தாஸ், திருப்பதி இஸ்கான் கோவிலின் தலைவரான திரு. ரேவதி ரமண தாஸ் ஆகியோர் உட்பட பல்வேறு முக்கிய பிரமுகர்களும் பத்திரிகை நிருபர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**நிகழ்ச்சியில் பேசப்பட்ட கருத்துகளில் சில துளிகள்:**

**திரு. சுப்ரமணியம்:** ஸ்ரீமத் பாகவதத்தை அடிப்படையாக வைத்து நாம் நமது கல்வித் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும்.

**திரு. பீம தாஸ்:** ஸ்ரீமத் பாகவதத்தினால் சைனா, பிரான்ஸ், ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா என எல்லா பகுதியில் உள்ளவர்களும் பக்தராக முடியும். உலகிலுள்ள மக்களில் ஒரு சதவீதத்தினர் பக்தர்களானால், உலகமே மாறி விடும்.

**திரு. ரேவதி ரமண தாஸ்:** திருப்பதியில் பல்வேறு மதுக் கடைகளும் மாமிசக் கடைகளும் இருப்பது ஏன்? மக்கள் பாகவத கலாசாரத்தை மறந்துவிட்டதே இதற்குக் காரணம். எனவே, ஸ்ரீமத் பாகவதம் குறித்த விழிப்புணர்ச்சியை மக்களிடையே எழுப்ப நாங்கள் முயற்சி செய்கிறோம்.

தமிழில் கடந்த எட்டு வருடங்களாக ஸ்ரீமத் பாகவதத்தின் முழுப் பதிப்பு கிடைக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இடது:** பாகவத வெளியீட்டில் திரு. பீம தாஸ் (நடுவில்), திரு. ரேவதி ரமண தாஸ் (வலது ஓரம்)

**மேலே:** பாகவத வெளியீட்டில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்கள்

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### முதல் காண்டம் அத்தியாயம் 2, ஸ்லோகம் 15

*யத்-அனுத்யாஸினா யுக்தா: கர்ம-க்ரந்தி-நிபந்தனம்*
*சிந்தந்தி கோவிதாஸ் தஸ்ய கோ ந குர்யாத் கதா-ரதிம்*

### மொழிபெயர்ப்பு

புத்திசாலிகள், கையில் வாளை ஏந்தி, கர்ம வினைகளின் பந்தப்படுத்தும் முடிச்சுகளை முழுமுதற் கடவுளை நினைவுகொள்வதன் மூலமாக வெட்டி வீழ்த்துகின்றனர். ஆகையால் அவரைப் பற்றிய செய்திகளில் யார்தான் கவனம் செலுத்தாமல் இருப்பார்?

### பொருளுரை

பலன்நோக்குக் கர்மங்களின் செயல்கள் மற்றும் விளைவுகளிலிருந்து ஒருவன் விடுபட விரும்பினால், பௌதிகப் பொருள்களுடனான ஆத்மாவின் தொடர்பினால் உண்டாக்கப்படும் முடிச்சை வெட்டி எறிய வேண்டும். கர்ம வினைகளின் சுழற்சியிலிருந்து விடுபடுவதே முக்தி எனப்படுகிறது. யாரொருவர் முழுமுதற் கடவுளின் தெய்வீக லீலைகளை எப்போதும் நினைவுகொள்கின்றாரோ, அவரை முக்தி தானாகவே பின்தொடர்கின்றது. ஏனெனில், பரம புருஷரின் செயல்கள் (லீலைகள்) அனைத்தும் பௌதிக சக்தியின் குணங்களுக்கு அப்பாற்பட்டவை. அவையனைத்தும் எல்லாக் கவர்ச்சிகளுடன் கொண்ட ஆன்மீகச் செயல்கள் என்பதால், முழுமுதற் கடவுளின் அந்த ஆன்மீகச் செயல்களுடன் கொள்ளும் இடைவிடாத உறவானது, பந்தப்பட்ட ஆத்மாவை படிப்படியாக ஆன்மீகமயமாக்கி, இறுதியாக பௌதிக பந்தம் என்னும் முடிச்சை துண்டித்துவிடுகிறது.

எனவே, பௌதிக பந்தத்திலிருந்து பெறப்படும் முக்தி, பக்தித் தொண்டினால் ஒரு பக்கவிளைவு போன்று தானாக அடையப்படுகிறது. ஆன்மீக அறிவைப் பெறுவது மட்டுமே முக்தியடைவதற்குப் போதுமானதல்ல. அந்த ஞானம் பக்தித் தொண்டினால் கவரப்பட்டு, இறுதியில் பக்தித் தொண்டு மட்டுமே மேலோங்கி இருக்க வேண்டும். அப்போது முக்தி சாத்தியமாகும். கருமி தனது பலன்நோக்குச் செயல்களை பக்தித் தொண்டுடன் இணைத்துவிடும்போது, அஃது அவனை முக்தியை நோக்கி அழைத்துச் செல்கின்றது. பக்தித் தொண்டுடன் இணைக்கப்படும் கர்மம், கர்ம யோகம் என்று அழைக்கப்படுகிறது. அதைப் போலவே அனுபவத்தினால் பெறக்கூடிய ஞானம், பக்தித் தொண்டுடன் இணைக்கப்படும்போது, அது ஞான யோகம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் தூய பக்தி யோகம் என்பது அத்தகைய கர்மத்தையும் ஞானத்தையும் சார்ந்தது அல்ல. ஏனெனில், பக்தி மட்டும் இருந்தால் போதும், கட்டுண்ட வாழ்விலிருந்து முக்தி அடைவது மட்டுமின்றி, பகவானுக்கான தெய்வீக அன்புத் தொண்டையும் பெறமுடியும்.

ஆகவே, குறைமதி கொண்ட சராசரி மனிதனைவிட உயர்நிலையில் இருக்கும் எந்தவொரு அறிவுடைய மனிதனும், முழுமுதற் கடவுளைப் பற்றிக் கேட்பதாலும், அவரது புகழைப் பாடுவதாலும், இடையறாது அவரை வழிபடுவதாலும், அவரை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இதுவே பக்தித் தொண்டின் பக்குவமான நிலை. இந்த விதியை விருந்தாவனத்தின் கோஸ்வாமிகள் உறுதியுடன் பின்பற்றினர். பக்தி மார்க்கத்தை பிரச்சாரம் செய்வதற்கு ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் அங்கீகரிக்கப்பட்ட அவர்கள், நம்முடைய நன்மைக்காக தெய்வீக விஞ்ஞானத்தைப் பற்றிய எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளனர். அவர்கள் ஸ்ரீமத் பாகவதம் மற்றும் இதர சாஸ்திரங்களின் போதனைகளுக்கு இணங்க, வேறுபட்ட சகப் பிரிவுகளுக்கும் (வர்ணங்களுக்கும்) வகுப்புகளுக்கும் (ஆஷ்ரமங்களுக்கும்) ஏற்ற வழிமுறைகளை நிர்ணயித்துள்ளனர்.

### ஸ்லோகம் 16

ஷுஷ்ருஷோ: ஷ்ரத்ததானஸ்ய வாஸுதேவ-கதா-ருசி:
ஸ்யான் மஹத்-ஸேவயா விப்ரா: புண்ய-தீர்த-நிஷேவணாத்


### மொழிபெயர்ப்பு

இரு பிறப்பெய்திய முனிவர்களே, எல்லா பாவங்களிலிருந்தும் முற்றிலும் விடுபட்டுள்ள பக்தர்களுக்குத் தொண்டாற்றுவது மிகப்பெரிய தொண்டாகும். அத்தகைய தொண்டினால் வாஸுதேவரைப் பற்றிய செய்திகளைக் கேட்பதற்கான சுவையை ஒருவர் பெறுகின்றார்.

### பொருளுரை

உயிர்வாழிகள் கடவுளுக்கு எதிராகச் செயல்படும்போது, அஃது அவர்களின் கட்டுண்ட வாழ்விற்கு காரணமாக அமைகிறது.

மனிதர்களில், தேவர்கள் (தெய்வீகமான உயிர்வாழிகள்), அசுரர்கள் (பரம புருஷரின் அதிகாரத்திற்கு எதிரான அரக்கர்கள்) என்று இரு பிரிவினர் உள்ளனர். பகவத் கீதையில் (பதினாறாவது அத்தியாயத்தில்) அசுரர்களைப் பற்றிய தெளிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் அசுரர்கள் ஒவ்வொரு பிறவியிலும் மேன்மேலும் அறியாமை நிறைந்த இழிவான வாழ்வில் வைக்கப்பட்டு கீழான மிருகப் பிறவிக்கு இழிவடைகின்றனர் என்றும், பரம்பொருளான புருஷோத்தமரைப் பற்றிய எந்த அறிவும் அவர்களிடம் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. அந்த அசுரர்கள், பரமனின் விருப்பப்படி வெவ்வேறு நாடுகளில் இருக்கும் பகவானின் முக்தி அடைந்த தொண்டர்களின் கருணையினால், படிப்படியாக இறையுணர்வைப் பெறும்படி சீர்திருத்தப்படுகின்றனர். இத்தகைய பகவத் பக்தர்கள் அவரது நெருக்கமான சகாக்களாவர். மனித சமுதாயத்தை கடவுளற்ற சூழ்நிலையின் அபாயத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அவர்கள் வரும்போது, அவர்கள், பகவானின் சக்தியைப் பெற்ற அவதாரங்கள், பகவானின் மகன்கள், பகவானின் தொண்டர்கள் அல்லது சகாக்கள் என்று அறியப்படுகின்றனர். ஆனால் அவர்களில் ஒருவரும் தங்களைக் கடவுள் என்று போலியாக உரிமை கொண்டாடுவதில்லை. அசுரர்கள் மட்டுமே தங்களைக் கடவுளாக அறிவிப்பர், மேலும் அத்தகைய அசுரர்களைப் பின்பற்றும் அசுர இயல்பு கொண்டவர்கள், இதுபோன்ற ஏமாற்றுக்காரர்களைக் கடவுள் என்றும் கடவுளின் அவதாரம் என்றும் ஏற்கின்றனர். சாஸ்திரங்களில் பகவானின் அவதாரங்களைப் பற்றிய தெளிவான தகவல்கள் உள்ளன. சாஸ்திரங்களில் உறுதி செய்யப்பட்டால் அன்றி, யாரையும் கடவுளாகவோ அவரது அவதாரங்களாகவோ ஏற்கக் கூடாது.


சாஸ்திரங்களின் கூற்றின்படி ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு சாக்ஷாத் பகவானே, ஆனால் அவர் ஒரு பக்தனின் பாகத்தை ஏற்றிருந்தார்.

இறைவனின் திருநாட்டிற்குத் திரும்பிச் செல்ல உண்மையான விருப்பம் கொண்டுள்ள பக்தர்கள், பகவானின் தொண்டர்களை பகவானைப் போன்றே மதிக்க வேண்டும். அத்தகைய பகவத் தொண்டர்கள், மஹாத்மாக்கள் அல்லது தீர்த்தர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு பிரச்சாரம் செய்கின்றனர். பகவத் தொண்டர்கள் மக்களை பகவானின் பக்தர்களாகும்படி தூண்டுகின்றனர். தங்களை பகவான் என்று அழைப்பதை அவர்கள் ஒருபோதும் பொறுத்துக் கொள்வதில்லை. சாஸ்திரங்களின் கூற்றின்படி ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு சாக்ஷாத் பகவானே, ஆனால் அவர் ஒரு பக்தனின் பாகத்தை ஏற்றிருந்தார். அவரைப் பற்றிய உண்மையை அறிந்த மக்கள், அவரைக் கடவுள் என்று அழைத்தனர்; ஆனால் அவரோ தன் காதுகளைக் கைகளால் மூடிக் கொண்டு பகவான் விஷ்ணுவின் நாமத்தை உச்சரிப்பது வழக்கம். அவர் கடவுளே என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றபோதிலும், கடவுள் என்று அழைக்கப்படுவதை அவர் வன்மையாகக் கண்டித்தார். தங்களைக் கடவுள் என்று அழைக்கப்படுவதில் மகிழ்ச்சியடையும் மனசாட்சியற்ற மனிதர்களைப் பற்றி நம்மை எச்சரிப்பதற்காகவே பகவான் சைதன்யர் அவ்வாறு நடந்து கொண்டார்.

இறையுணர்வைப் பரப்புவதற்காக வரும் பகவத் பக்தர்களுக்கு, புத்திசாலிகள் எல்லா விதத்திலும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். பகவானுக்கு நேரடியாக தொண்டு புரிவதைவிட, அவரது தொண்டருக்குத் தொண்டு புரிவதால் பகவானை அதிகமாக திருப்திப்படுத்த முடியும். தன்னுடைய தொண்டர்கள் முறையாக மதிக்கப்படுவதைக் காணும்போது பகவான் மிகவும் திருப்தியடைகிறார். அத்தகைய தொண்டர்கள் பகவானின் தொண்டிற்காக எல்லா அபாயங்களையும் எதிர்கொள்வதால், பகவானுக்கு மிகவும் பிரியமானவர்களாக உள்ளனர். தன்னுடைய (இறைவனுடைய) புகழைப் பரப்புவதற்காக எல்லா அபாயங்களையும் எதிர்கொள்பவரை விட தனக்கு பிரியமானவர்கள் வேறு எவரும் இல்லை என்று பகவத் கீதையில் (18.69) பகவான் அறிவிக்கின்றார். பகவத் தொண்டர்களுக்குத் தொண்டு செய்வதால், ஒருவர் அத்தகைய தொண்டர்களின் குணங்களைப் பெற்று, பகவானின் பெருமைகளைக் கேட்பதற்குத் தகுதியுடையவர் ஆகின்றார். பகவானைப் பற்றிக் கேட்பதற்கான ஆர்வமே, அவரது இராஜ்ஜியத்தினுள் நுழைய விரும்பும் பக்தருக்கான முதல் தகுதியாகும். (தொடரும்)




## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(செப்டம்பர் 1, 2011 முதல் அக்டோபர் 15, 2011 வரை)**

### செப்டம்பர்

2, வெள்ளி , ஸ்ரீமதி சீதா தாகூராணி (அத்வைத ஆச்சாரியரின் துணைவியார்) தோன்றிய நாள்

5, திங்கள், ராதாஷ்டமி, ஸ்ரீமதி ராதாராணி தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

8, வியாழன், பர்ஸ்வ ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:05–10:10

9, வெள்ளி, வாமன துவாதசி, வாமனர் தோன்றிய நாள் (விரதம் முந்தைய நாளே அனுசரிக்கப்படுகிறது)
ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி தோன்றிய நாள்

10, சனி, ஸ்ரீல பக்திவினோத தாகூர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

11, ஞாயிறு, ஸ்ரீல ஹரிதாஸ தாகூர் மறைவு நாள், இரண்டாவது சாதுர்மாதத்தின் கடைசி நாள்

12, திங்கள், ஸ்ரீல பிரபுபாதர் சந்நியாசம் ஏற்ற நாள்
மூன்றாவது சாதுர்மாத விரதம் ஆரம்பம் (ஒரு மாதத்திற்கு பால் சாப்பிடக் கூடாது)

24, சனி, இந்திர ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:04–10:06

### அக்டோபர்

6, வியாழன், ஸ்ரீ விஜய தசமி, பகவான் ஸ்ரீ இராமர் போரில் வெற்றி கண்ட திருநாள்,
ஸ்ரீபாத மத்வாசாரியர் தோன்றிய நாள்

8, சனி, பஸங்குச ஏகாதசி விரதம், மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:03–10:03
ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீல ரகுநாத பட்ட கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீல கிருஷ்ணதாஸ கவிராஜ் கோஸ்வாமி மறைவு நாள்

10, திங்கள், மூன்றாம் சாதுர்மாதத்தின் கடைசி நாள்

11, செவ்வாய், ஸ்ரீ முராரி குப்தர் மறைவு நாள்
நான்காம் சாதுர்மாத விரதம் ஆரம்பம் (ஒரு மாதத்திற்கு உளுந்து சாப்பிடக் கூடாது)
கார்த்திக் (தாமோதர) மாதத்தின் முதல் நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஒசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஒசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.



# பகவத் தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**




## நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரியுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும். ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. சந்தா தொகை: ஒரு வருடம் ரூ. 160; இரண்டு வருடம் ரூ. 300; ஐந்து வருடம் ரூ. 700.

அனுப்ப வேண்டிய முகவரி: பகவத் தரிசனம், ISKCON, 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553




## தங்கள் சந்தாவை புதுப்பியுங்கள்

பகவத் தரிசனத்திற்கான தங்களது சந்தா எப்போது முடிவடைகிறது என்று தங்களுக்குத் தெரியுமா? பகவத் தரிசனம் தங்களை வந்து சேரும்போது, அதன் உறையிலுள்ள தங்களது முகவரியின் வலதுபுறத்தில் சந்தா முடிவுறும் மாதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை கவனித்து, தங்கள் சந்தா முடிவுறுவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து தங்களது ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முன்பு **ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்** என்று அறியப்பட்ட இப்பத்திரிகை, தற்போது
**பகவத் தரிசனம்**
என்ற பெயரில் வலம் வருகிறது;
வேறு மாற்றங்கள் ஏதுமில்லை.

பகவத் தரிசனம் படியுங்கள்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!




# தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்

அண்ணாநகர், மதுரை. போன்: 0452 2524553

**இராஜபாளையம்**
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

**திண்டுக்கல்**
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

**காரைக்குடி**
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

**தேனி**
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

**இராமநாதபுரம்**
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

**சிவகாசி**
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

**தூத்துக்குடி**
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553

**கம்பம்**
53, குமுளி ரோடு, காந்தி சிலை அருகில்.
போன்: 04554 274553

**அருப்புக்கோட்டை**
102, 103 திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை.
போன்: 04566 224553